Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C797)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 14 சனிக்கிழமை (30.07.2011) பக்கங்கள் 16 ஓசை – 304



இந்தியாவுடன் நல்லுறவு ஏற்பட

12




பிதிர்க்கடன் நிறைவேற்ற

09



சேர்ந்து விளையாடுவார்


07



புரட்சிப்படைத் தளபதி கொலை

13

# உதயன் செய்தி ஆசிரியர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்



**யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகையின் பிரதம செய்தி ஆசிரியர் நேற்றிரவு இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்துள்ளார்.**

நேற்று இரவு 7.30 மணியளவில் யாழ்.நாவலர் வீதியில் உள்ள அவரது வீட்டுக்கு அண்மையில் நடந்த இச் சம்பவத்தில் பிரதம செய்தி ஆசிரியரான ஞானசுந்தரம் குகநாதன் தலையில் படுகாயமடைந்து யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்றுவருகின்றார்.

வழமைபோல நேற்றும் உதயன் பத்திரிகை அலுவலகத்தில் தனது கடமையை முடித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது இவரின் பின்புறமாகத் தொடர்ந்து வந்த இனந்தெரியாத இருவர் இவரை இடைமறித்து கம்பியால் தலைப்பகுதியில் குத்தியும் அடித்தும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்திய இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றுவிட்டனர்.

இத் தாக்குதல் காரணமாகத் தலையில் காயமடைந்த நிலையில் தனது வீட்டுக்குள் ஓடிச்சென்ற குகநாதன் உதயன் பணிமனைக்கு தகவல் கொடுத்ததையடுத்து அவசர அவசரமாக அவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

யாழ்.போதனா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தீவிர சிகிச்சையளிக்கப்பட்டது. தொடர்ந்து நேற்று இரவு உடனடியாக இவருக்கு தலைப் பகுதியில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆபத்தான கட்டத்தில் இருந்து அவர் மீண்டுவிட்டதாக நள்ளிரவு மருத்துவர்கள் தெரிவித்தனர்.

## யாழ்.பல்கலைக்கு பேரவை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கு புதிய பேரவை உறுப்பினர்கள் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்

மார்க்கண்டு ராமதாசன், டாக்டர் சுப்பிரமணியம் ரவிராஜ், கைலாசபிள்ளை தெய்வேந்திரம், கனகரத்தினம் கேசவன், தர்மலிங்கம் ராஜரட்ணம், முருகுப்பிள்ளை ஸ்ரீபதி, சுசீலாதேவி சாரங்கபாணி, தேவராஜன் ரெங்கன், முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம், பொன்னுத்துரை பாலசுந்தரம்பிள்ளை, டாக்டர் சிவசுப்பிரமணியம், வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், இளையதம்பி அன்னலிங்கம் ஆகியோரே பேரவை உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி 13 உறுப்பினர்களும் அடுத்து வரும் 3 ஆண்டுகளுக்கு பேரவை உறுப்பினர்களாகப் பணியாற்றுவார்கள்.

## நியமனம்

இவ்வருடம் மருத்துவ பட்டதாரிகளாக வெளியேறும் வைத்தியர்களில் 30 முதல் 35 வரையான வைத்தியர்கள் குடாநாட்டு வைத்தியசாலைகளில் சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

குடாநாட்டு வைத்தியசாலைகளில் சுமார் 65 வைத்தியர்கள் பற்றாக்குறை யாகவுள்ளதாகவும். இது குறித்த விபரங்களை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் சுகாதார அமைச்சிற்கு அனுப்பிவைத்ததாகவும் தெரியவருகின்றது. (பா)

# அதிசயிக்கத் தக்க அபிவிருத்தி சிங்கப்பூர் அமைச்சர் தெரிவிப்பு




கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்திற்கு வந்துசென்ற பிறகு, மீண்டும் இப்போது வந்து பார்க்கும்போது யாழ்ப்பாணத்தில் அதிசயிக்கத்தக்க அபிவிருத்தியைக் காண்கின்றேன் என்று நேற்று யாழ். வந்திருந்த சிங்கப்பூர் முன்னாள் வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் இயோ கூறினார்.

சிங்கப்பூர் சர்வதேச நிறுவனம் மற்றும் அங்குள்ள அமைப்புக்களுடன் இணைந்து யாழ். பொது நூலகத்தில் சிறுவர்களுக்கென தனியாக நிர்மாணித்துக் கொடுத்திருக்கும் சிறுவர் நூலகப்பிரிவை யாழ். மாநகர சபையிடம் உத்தியோக பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வில் தலைமை தாங்கி உரையாற்றிய சிங்கப்பூர் அமைச்சர் மேலும் தனதுரையில்,

இத்தனை விரைவாக யாழ்ப்பாணம் தன்னை மீளமைத்துக் கொண்டுள்ளது பற்றி வியப்புத் தெரிவித்தார்.

கட்டடங்கள், வீதிகள், வாகனங்கள், மக்களது சுதந்திர நடமாட்டம், விற்பனை நிலையங்கள், பொருட்களை வாங்கிச் செல்லும் மக்கள் என 2009 இல் தான் பார்த்ததற்கும் இப்போ துள்ள யாழ்ப்பாணத்திற்குமி டையில் வியத்தகு மாற்றங்களும அபிவிருத்தியையும் தான் காண்பதாக ஜோர்ஜ் இயோ தெரிவித்தார்.

நேற்றுக்காலை 11.30 மணியளவில் (15 பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற வழக்கிற்கு வாய்ப்பில்லை – ரணில்

ரோம் சமவாயத்தில் கையெழுத்திடாத இலங்கை போர்க்குற்றம் தொடர்பான வழக்குக்கு செல்லவேண்டிய அவசியம் ஏற்படாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

சானல் 4 தொலைக்காட்சியில் போர்க்குற்றம் தொடர்பாக இலங்கை அரசு மீதும் இராணுவத்தினர் மீதும் மீண்டும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், லண்டனில் பொதுநலவாய நாடாளுமன்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்ளச்சென்றிருந்த ரணில் விக்ரமசிங்க பி.பி.சி.க்கு இவ்வாறு தெரிவித்துள்ளார். இதேவேளை, நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தை அரசாக அங்கீகரிக்கும் போக்கை தெற்கு சூடான் முன்னெடுக்கக் கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## சுமந்திரனை ஏன் மறுக்கவில்லை?

போர்க்குற்ற விசாரணை தேவையில்லை என கருத்துத் தெரிவித்திருக்கும் சுந்திரனுக்குக் கூட்டமைப்பு ஏன் இதுவரை எதிர்ப்போ அல்லது மறுப்போ வெளியிடவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்தமூர்த்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் இவ்வாறான கருத்து இலங்கை அரசாங்கத்தையும், இந்திய அரசாங்கத்தையும் போர்க்குற்ற விசாரணையிலிருந்து பாதுகாக்க எடுக்கும் நடவடிக்கையாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த மக்கள் எதுவும் அறியாதவர்கள், அரசியல் ஞானம் அற்றவர்கள் என்று சுமந்திரன் கூறியிருப்பது சிங்களப் பேரினவாத சக்திக்கெதிராகப் போராடிவரும் புலம்பெயர் மக்களின் எழுச்சியைக் கொச்சைப்படுத்தியிருப்பதாகும் என்றும் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கூறியுள்ளார்.

## சுயரூபம் வெளிப்பட்டது

கூட்டமைப்பினர் கொள்கையில் தாம் உறுதியாக இருப்பது போன்று வார்த்தைகளில் மட்டும் வீர வசனங்களைப் பேசி தமிழ் மக்களை நம்பவைத்து வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர். தேர்தலின் பின்னர் தங்கள் சுயரூபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர் என்று முன்னாள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியான மறுநாளே லண்டனில் சுமந்திரன் போர்க்குற்ற விசாரணை வேண்டாம் என்று கூறியுள்ளார். கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனோ, பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என தமிழ் மக்கள் தமக்கு ஆணை வழங்கியுள்ளனர் என்றுள்ளார்.

இவர்களது கருத்துக்களை நோக்கும்போது, ஒற்றையாட்சி அரசியலமைப்புக்குள் தமிழர்கள் அடிமையாக வாழும் நிலைக்குத் தள்ளத் திரைமறைவு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என்று தெரிகிறது. கடந்த 20 ஆண்டுகளாக நிராகரிக்கப்பட்டு வந்த 13 ஆம் திருத்தச்சட்டத்தையும் மாகாண சபையையும் அங்கீகரித்துத் தமிழர்களைச் சிறுபான்மை இனம் என்று ஏற்றுக்கொள்ளும் சதி செய்துவருகின்றார்கள் என்கிறார் கஜேந்திரன்.

# சிறுவர் சிகிச்சைப் பிரிவு மீண்டும் இன்று முதல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நீண்டகால மாக தடைப்பட்டிருந்த சிறுவர் சிகிச்சைப் பிரிவு இன்று சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சிகிச்சைக்கு வருவோர் முன்னைய சிகிச்சைப் பதிவேடுகள் இருப்பின் அதனையும் எடுத்து வருமாறும், இல்லையெனில் புதிய கொப்பியொன்றினைக் கொண்டு வந்து பதிவினை மேற்கொள்ளுமாறும் மேலதிக சிகிச்சை தேவைப்படுவோருக்கு அதற்கான சிபார்சுகள் செய்யப்படும் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (11)

# விசேட தேவை உடையவர்களை வலுப்படுத்த உடுவில் பிரதேச செயலர் பிரிவில் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

விசேட தேவை உடையவர்களை வலுப்படுத்தும் செயற்றிட்டமொன்று உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் கடந்த புதன்கிழமையும், வியாழக்கிழமையும் முன்னெடுக்கப்பட்டன.

உடுவில் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் சமூகசேவை அலுவலர் எஸ்.சுரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தேசியமொழிகள் சமூக மேம்பாட்டு அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.எல். எம்.ஹாசிம், சமூகசேவைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் எம்.சி.எல்.பெர்ணான்டோ மற்றும் வளவாளர்களாக எம். ஆர்.சாந்தகுமார், மாசா பண்டார, நிலுகா கேதீஸ்வரன், யாழ் மாவட்ட இணைப்பாளர் என். ஜனனி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச்செயலமர்வில் விசேட தேவைப்பாடு உடையவர்களுடன் அவர்களை பராமரிப்பவர்கள் மற்றும் சமுதாய மட்ட புனர்வாழ்வுத் தொண்டர்களுமென சுமார் 80க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

# குடும்பப் பிரச்சினைக்கு குண்டுத் தாக்குதல்

உறவினர் ஒருவரின் வீட்டின் மீது காரொன்றில் அடியாட்களுடன் வந்த பெண்ணொருவர் கைக்குண்டு வீசி தாக்குதல் நடத்திய சம்பவமொன்று சீகிரியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சீகிரியா பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, குறித்த குண்டுத் தாக்குதல் சம்பவத்துக்காக மேற்படி பெண்ணுக்கு உதவியதாகக் கூறப்படும் ஐந்து பேரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் காலி மற்றும் மாத்தறை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய தான பெண்ணைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# வெடிகுண்டு செயலிழந்தது

கரவெட்டிப் பகுதியிலுள்ள வெற்றுக் காணியொன்றிலிருந்து நேற்றுக் காலை 10.00 மணியளவில் குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்திலுள்ள கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாசாலைக்கு அருகிலுள்ள வெற்றுக் காணியொன்றில் பொது மகன் ஒருவரால் குண்டு ஒன்று இனங்காணப்பட்டது.

இதனையடுத்து இது குறித்து அப்பகுதி கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டது. கிராம அலுவலர் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து பொலிஸாரும், இராணுவத்தினரும் அவ்விடத்துக்கு வந்து குண்டை செயலிழக்கச் செய்தனர்.

இவ் வெற்றுக் காணியில் நின்ற மாட்டுக்கு தண்ணீர் வைக்கச் சென்ற சமயமே பொதுமகன் ஒருவரால் இக்குண்டு கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

# வேட்டைத் திருவிழா

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு அருள்தரு கேணியடி காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த பிரமோற்சவத்தின் வேட்டைத்திருவிழா இன்று மதியம் 2.00 மணிக்கு இடம்பெறும்.

தொடர்ந்து மாலை தம்ப பூசை, வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று பெண்களுக்கான விசேட நிகழ்வாக திருவிளக்கு பூசையும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அம்பிகை உள் வீதி, வெளிவீதி வரும் அற்புறக் காட்சியும் இடம்பெறும்.

நாளை மாணவர்களுக்கான சைவ சமய அறிவுப் போட்டிப் பரீட்சை நடைபெறும். பத்து தினங்களும் மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை சிறப்பாக இடம்பெற்று வருகிறது. (நி)

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு யாழ்.வணிகர் கழகம் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர்கழகம் யாழ். மாவட்டத்தில் முன்னெடுத்துள்ள வாழ்வாதாரத் திட்டத்தில் ஒன்றான கோழி வளர்ப்புத் திட்டத்தை கிளிநொச்சி மாவட்டத்திலும் மேற்கொள்ளும்படி கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகள் மற்றும் பொது மக்களும் வணிகர்கழகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையான பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்வதினால் உதவி வழங்க வணிகர் கழகம் முன்வந்துள்ளனர். கிளி நொச்சி, பளை, கண்டாவளை, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலகங்களிலும் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்படவுள்ளதாக வணிகர் கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.


# சமூக வளவாளர்களுக்கு பயிற்சிப் பட்டறை

(கட்டுவன்)

வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தினால் சமூக வளவாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையின் போது தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜே/221,ஜே/222, ஜே/223, ஜே/224, ஜே/225, ஜே/226, ஜே/228, ஜே/230, ஜே/231, ஜே/232, ஜே/236, ஜே/237, ஜே/241, ஜே/243, ஜே/245 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 25 பேர் துரித மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளரினால் சமூக வளவாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (22)

# முஸ்லிம் அரச ஊழியர்களுக்கு சலுகை அமைச்சர் காமினி லொகுகே அறிவிப்பு



(கொழும்பு)

புனித றமழான் நோன்பு காலப் பகுதியில் தமது சமய அனுஷ்டானங்களை மேற்கொள்வதற்கு வசதியாக அரச துறையிலுள்ள முஸ்லிம் ஊழியர்களுக்கு விசேட லீவு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனியார்துறை ஊழியர்களுக்கும் இந்த விசேட லீவை வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தனியார் தொழில் தருநர்களிடம் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொகுகே கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதிவரையில் நாளாந்த தொழுகைக்காக விசேட லீவு வழங்குமாறும் றமழான் பெருநாள் தினத்தில் விசேட விடுமுறை வழங்குமாறும் - நோன்புப் பெருநாளுக்கு 14 தினங்களுக்கு முன்னர் பண்டிகை அல்லது வேதன முற்பணம் வழங்குமாறும் அமைச்சர் கோரியுள்ளார்.

# வியாபாரிகளிடம் தண்டம் அறவீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாத 17 வர்த்தகர்களுக்க சாவகச்சேரி நீதிமன்றத்தினால் 70 ஆயிரம் ரூபா வரையில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் யாழ். மாவட்ட செயலக பாதுகாப்பு சபையினரின் பரிசோதகர்களினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது இவ் வர்த்தகர்கள் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, காலவாதியான பொருட்களை விற்பனை செய்தமை, பற்றுச்சீட்டு வழங்காமை மற்றும் நிறை குறைவான பொருட்களை விற்பனை செய்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பெயரில் இவர்களுக்கு எதிராக பரிசோதகர்களினால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த 17 வர்த்தகர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 17 பேருக்கும் மொத்தமாக 70 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.




1 வது பிறந்தநாள் அழைப்பிதழ்

திரு. திருமதி சபேசன் தம்பதிகளின் செல்வப் புதல்வன்

W/துஷ்



தனது முதலாவது பிறந்த தினத்தை 31.07.2011 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் அப்பப்பா, அப்பம்மாவின் இல்லத்தில் 262/1, கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை) கொண்டாட இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து செல்வனை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



வாழ்த்துவோர்
குணரட்ணம் குடும்பத்தினர்
(முத்தையா பேக்கரி உரிமையாளர்)

பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்

(C/847)


# யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் 'வேம்பூ' வெளியீட்டு விழா

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலைத் தமிழ் மன்றத்தின் முதலாவது வெளியீடான 'வேம்பூ' என்ற சஞ்சிகை வெளியீட்டு விழா எதிர்வரும் 02.08.2011 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் சரஸ்வதி சிவலிங்கராஜா ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிப்பர்.

நிகழ்வில் ஆசியுரையை கல்லூரி அதிபர் திருமதி க.பொன்னம்பலமும் நூலின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபனும் வழங்கவுள்ளனர். கல்விக் காருண்யன் ஈ.எஸ். பி. நாகரத்தினம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வார்.

# பேராசிரியர் ஹூல் பொலிஸ் விசாரணையில்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு அவதூறு ஏற்படும் வகையில் பேராசிரியர் ரட்ணஜீவன் எச். ஹூல் இணையத்தளமொன்றிற்கு உண்மைக்குப் புறம்பான தகவல்களை வெளியிட்டமை தொடர்பில் அமைச்சர் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் அண்மையில் முறைப்பாடு செய்திருந்தார்.

மேற்படி முறைப்பாடு தொடர்பில் பேராசிரியரிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக தெரியவருகிறது.

# தாயைக் கொலை செய்த தனயன்

(மட்டக்களப்பு)

பெற்ற தாயை மகனே அடித்துக் கொலை செய்த சம்பவம் ஒன்று மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆரையம்பதி கிரான்குளத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றும் நபர் ஒருவர் தனது தாயை இவ்வாறு அடித்து கொலை செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள போதிலும் பொலிஸார் அவரை தேடி வருவதோடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவர் 63 வயதுடைய சரஸ்வதி அலோசியஸ் எனவும் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மனிதனிடம் அனைத்து விதப் பொறுப்புக்களையும் கொடுத்து விட்டால், அவனது சுய மதிப்பும், கடவுளிடத்தில் உள்ள பயபக்தியும் அவனைச் சீர்செய்துவிடுகிறது. அவன் விழிப்படைகிறான்.

-காந்தி ஜி-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## வாழத் தகுந்த உலகம் செய்ய!

யாழ். பொது நூலகத்தில் வசதிகள் மேம்படுத்தப்பட்ட சிறுவர் நூலகப் பிரிவு நேற்று உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த சிறுவர் நூலகப் பிரிவின் புனரமைப்பை சர்வதேச தரத்திற்கு நிர்மாணித்து உதவியிருக்கிறது சிங்கப்பூர் சர்வதேச நிறுவனம்.

இந்நிறுவனம் சிங்கப்பூர் இலங்கை சமூகத்தின் உறுப்பினர்களுடன் சேர்ந்து இந்தத் திட்டத்தை பூர்த்திசெய்து யாழ்ப்பாணத்திற்கு கையளித்திருக்கிறது. இலங்கைத் தமிழர்களையும் பெருமளவில் சிங்களவர்களையும் உறுப்பினர்களாகக் கொண்ட இந்த நட்புறவுச் சமூகம் இந்த உயர்தர நூலகப் புனரமைப்பில் பெரும் பங்காற்றியிருக்கிறது.

இலங்கையிலேயே முதற்தரமான இச்சிறுவர் நூல் நிலையப் பகுதியைக் கையளித்து அங்கு உரையாற்றிய சிங்கப்பூர் முன்னாள் வெளிநாட்டமைச்சர் இயோ, 2009 ஒக்டோபரில் தான் வந்திருந்த போது கண்ட யாழ்ப்பாணத்திற்கும் இப்போது காணும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான மாறுதல் வியத்தகு அளவிற்கு முன்னேற்றகரமாக இருப்பதாகக் குறிப்பிட்டு, அந்த பிரமிப்பூட்டும் அபிவிருத்தியின் ஒரு பகுதியாக இந்த சர்வதேச தர சிறுவர் நூலகமும் இணைக்கப்படுவதில் தனது மகிழ்ச்சியை வெளியிட்டார்.

பொதுவாகவே நூலகங்களைப் பால்நினைந்தூட்டும் அன்னையர்க்கு இணையாகச் சொல்வதுண்டு. குழந்தைப் பருவத்திலிருந்தே பழப்பதற்கான அவாவையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தல் என்பது உண்மையில் பெருங் கருணைச் செயலே. ஏனெனில், புத்தகங்களே அவர்களை நல்ல மனிதர்களாக உருவாக்கும்.

வாசிப்பு என்பதை அலட்சியப்படுத்துவதே மனித வாழ்வைச் சிதைவுறச் செய்யும் குற்றம் எனலாம். அந்தக் குற்றத்திற்கு ஒருவன் தன் வாழ்வையே விலையாகக் கொடுக்கிறான. அதுவே ஒரு சமூகமாக இருந்தால் தன் வரலாற்றையே விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும்.

பாடப்புத்தகங்களுக்கு அப்பாலான வாசிப்பை பெரும்பாலும் நூலகங்களே நிறைவாக்கித் தரமுடியும். அந்த வாசிப்பின் மூலமே நாம் குற்றங்களிலிருந்து விடுபட முயற்சிக்கும் மனிதர்களாக முடியும்.

குழந்தைகள் நூலகப் பிரிவை அபிவிருத்தி செய்வதன் மூலம், யாழ்ப்பாணத்திலுள்ள சிறுவர்களுக்கு அனுகூலமாக கற்றுக் கொள்ளும் ஓர் இடத்தை ஏற்பாடு செய்து வழங் குதல் மற்றும் துடிப்புடன் படிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுதல், சிறுவர்களிடையே நட்புறவுகளை வளர்த்தல் போன்றவை இத்திட்டத்தின் நோக்கமென சிங்கப்பூர் சர்வதேச நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

குதிரைகளை குளக்கரை வரை கொண்டு சென்று விட முடியும்; தண்ணீரை அவைதான் குடித்து தாகம் தணிக்க வேண்டும் என்பதாக ஆங்கிலப் பழமொழி ஒன்றுண்டு. நூல் நிலையத்தை அமைத்துக் கொடுத்தல், புத்தகங்களை வாங்கி அடுக்குதல், படிப்பதற்கு ஏதுவான சூழலை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவற்றை அரசாங்கமும் மற்றும் உதவி நிறுவனங்களும் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஆனால், பிள்ளைகள் படிப்பதற்கான தூண்டுதலையும், பள்ளிப் பாடங்களுக்கு வெளியே புத்தகங்கள் மீதான விருப்பத்தையும் அக் குழந்தைகளின் பெற்றோரும் ஆசிரியர்களுமே செய்ய முடியும்.

பாடப்புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்களை, கதைகள், கவிதைகளைப் படிப்பது கூடாது; அது பிள்ளைகளைக் கெடுத்து விடும் என்ற மூட நம்பிக்கை இன்றும்கூட சில பெற்றோரிடமும் ஆசிரியர்களிடமும் உண்டு. பாடப்புத்தகங்களுக்கு வெளியில் உலகமில்லை என்ற பொய்த்தோற்றத்தை மாணவர்களிடம் கொடுப்பதுதான் அவர்களைக் கெடுக்கும் செயலாகும் என்பதை உணரவேண்டும். பாடசாலைக் கல்வியை முடித்து வெளியில் வரும் ஏராளமான மாணவர்கள் வெளியுலகைப் பார்த்து தடுமாறிப் போவது இதனால்தான்.

சிறுவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல் என்பது, பாடப்புத்தகங்கள் தவிர்ந்த புத்தகங்களுக்கு அவர்களை ஆற்றுப்படுத்துதலேயாகும். ஒவ்வொரு குழந்தையும் புத்தக வாசிப்புப் பழக்கத்தை அறிந்துகொண்டுவிட்டால், உலகம் இன்னும் சற்று வாழத் தகுந்த இடமாக மாறிவிடும். அதில் சந்தேகம் இல்லை.

- ஆசிரியர்

# அறிவாற்றலுடன் கூடிய சிறந்த சமூகம் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆடைக் கைத்தொழில் ஊடாகவும், வீட்டுப் பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலமும் முன்னேறி வருகின்ற உலகில் போட்டித் தன்மையை எதிர்கொள்ள முடியாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜாஎல நிவந்தனம ஜினராஜ மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், உலகம் முன்னேறமடையும் போது தொடர்ந்து ஆடைக் கைத்தொழில் ஊடாகவும், வீட்டுப் பணிப்பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதன் மூலமும் எம்மால் போட்டி போட முடியாது

சிறந்த அறிவாற்றல் உடையவர்களையே நாம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்க வேண்டும்,அல்லது உயர்நிலை தொழிநுட்பத்துடன் கூடிய கைத்தொழில்களை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும் இதற்காக சிறந்த அறிவாற்றலுடைய சமூகமும், இளைய தலைமுறையும் நாட்டில் உருவாகவேண்டும்



இது போன்ற பாடசாலை மூலமே அந்த நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார்.

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை

### பாடவிதானங்களுக்கு அமைவாக பகுதி இரண்டு வினாத்தாள் தயாரிப்பு

(கொழும்பு)

பாடநூல் மற்றும் பாடவிதானங்களுக்கு அமைவாகவே இம்முறை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் இரண்டாம் பகுதி வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

இந்த விடயம் தொர்டர்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்கள் பாடசாலையில் உரிய முறையில் பாடங்களை உள்வாங்கி சிறந்தவாறு பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் உயர் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ள முடியும்

எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மூன்று இலட்சத்து 22 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

நான்காயிரம் பரீட்சை நிலையங்களில் இம்முறை பரீட்சை நடைபெறவுள்ளதுடன், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க மேலும் தெரிவித்தார்.

## முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம்

(வடமராட்சி)

அல்வாய் வேவிலந்தை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 தினங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 4 ஆம் திருவிழாவன்று ஆடிப்பூரமும் பெண்களின் கற்பூர தீபமும் 6ஆம் திருவிழா அன்று 108 சங்கர்பிஷேகமும், 7ஆம் திருவிழா அன்று காலை நவசக்தி அர்ச்சனையும் மாலை திருவிளக்கு பூசையும், 11 ஆம் திருவிழா அன்று திருமாங்கல்ய பூசையும் 13ஆம் திருவிழா அன்று மாலை வேட்டை சப்பறத்திருவிழாவும்,14ஆம் திருவிழா அன்று காலை 8.30 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் காலை 6 மணிக்கு சமுத்திர தீர்த்த உற்சவமும், 16ஆம் நாள் 1008 சங்காபிஷேகமும் பூங்காவனத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. (100)

## இருநாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை

(வவுனியா)

வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 10 உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சிப் பட்டறை யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிறுக்கிழமையும் வடமாகாண உள்ளூராட்சி திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ளது

மக்கள் பிரதிநிதிகளான இவர்களுக்கு இப் பயிற்சியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பயிற்சித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீண்ட கால அனுபவம் பெற்ற மாகாண உள்ளூராட்சி திணைக்கள சிரேஷ்ட உயர் அதிகாரிகள் பலர் பயிற்சிப்பட்டறையில் உரையாற்றவுள்ளனர். (39)

## இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஈரான் தொடர்ந்தும் ஒத்துழைப்பு நல்கும்

### அந்நாட்டின் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கத் தயாரென ஈரானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஈரான் வெளிவிவகார பிரதி அமைச்சர் செய்யத் ஆமிர் மன்சூர் மற்றும் பிரதமர் டி.எம்.ஜயரத்னவை நேற்று சந்தித்து கலந்துரையாடிய போது பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான் ஒத்துழைப்புகள் குறித்து இந்த சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்ட்தாக பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

எரிபொருள் நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கிய சமயம் ஈரானிய அரசாங்கம் வழங்கிய ஒத்துழைப்பு மகத்தானது என பிரதமர் இதன்போது பாராட்டியுள்ளார்

## நினைவஞ்சலி நிகழ்வு

(பருத்தித்துறை)

தகைசார் பேராசிரியரும் பேரறிஞருமான கார்த்திகேசு சிவத்தம்பியின் நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3 மணியளவில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் நினைவுப் பேருரைகளை வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரன், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய போஷகர் சி.செல்வரட்ணம் அதிபர் இ.இராகவன், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா எழுத்தாளர் தெணியான், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா, கலாநிதி எஸ்.கிருஷ்ணவேணி, யாழ். தேசிய கல்வியற்கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மற்றும் கலாநிதி த.கலாமணி பேராசிரியர் கி.விசாகரூபன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் வழங்கவுள்ளனர். (109)

## பூர்த்தியாக்கப்படாத நிலையிலுள்ள சனசமூக நிலைய கட்டடம்

(வடமராட்சி)

பருத்தித்துறை அவ்வொல்லை கிரா்மத்தில் இளைஞர் சனசமூக நிலையத்தின் மேல்மாடிக் கட்டடம் பல வருடங்களாக பூர்த்தியடையாதநிலையில் காணப்படுகிறது.

இச்சனசமூக நிலைய கட்டத்தை அபிவிருத்தி செய்து பூர்த்தியடைய வைப்பதில் இதுவரை எவரும் அக்கறை கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே பூர்த்தியடையாமல் இருக்கும் இக்கட்டடத்திருத்த வேலையை விரைவில் பூர்த்தி செய்து தருமாறு அப்பகுதி மக்கள் உரியவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

## பாடசாலைகளைத் திறக்க பிரதேச மக்கள் கோரிக்கை

(யாழ். நிருபர்)

காரைநகரில் உள்ள 14 பாடசாலைகளில் தற்போது எட்டுப் பாடசாலைகள் மட்டுமே இயங்கி வருவதால் மீதமுள்ள ஆறு பாடசாலைகளையும் மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைநகர் தோப்புக்காடு மக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் கடந்த 20 வருடங்களாக இயங்காதிருந்த தோப்புக்காடு மறைஞான சம்மந்த வித்தியாசாலை மீளத் திறந்து வைக்கப்பட்டு இங்கி வருகிறது. இவ்வாறு மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள ஏனைய பாடசாலைகளையும் விரைவில் மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

## மீண்டும் போக்குவரத்து சேவையை ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை

(முரசுமோட்டை)

கண்டாவளைப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் இப்பிரதேசத்துக்கான போக்குவரத்து சேவைகள் கடந்த ஒரு வார காலமாக தொடர்ச்சியாக நடைபெற்று வந்த நிலையில் இச்சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இப்பிரதேசத்தில் தினமும் பாடசாலைக்குச் செல்லும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் மற்றும் உத்தியோகத்தர் உள்ளிட்ட பொதுமக்கள் தாம் பல்வேறு போக்குவரத்து நெருக்கடியினை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, போக்குவரத்து சேவைகள் முற்றாகத் தடைப்பட்டதால் அன்றாட செயற்பாடுகளை குறிப்பாக வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கின்றனர். நிறுத்தப்பட்டுள்ள போக்குவரத்துச் சேவை மீண்டும் ஏற்படுத்தப்பட்டால் தாம் இலகுவாக அனறாட நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (110)

## புனரமைப்பு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் அம்பலப்பெருமாள் கிராமத்தின் அம்பலவன் சின்னங்கட்டு குளப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் இக்குளப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (121)

## நீதிமன்ற அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் மற்றும் ஆனைக்கோட்டைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டதற்கு அதிகமாகக் 'கள்' வைத்திருந்த இருவருக்கு எதிராக யாழ்.நீதிமன்றம் எட்டாயிரம் ரூபா தண்டம் விதிதது்த் தீர்ப்பளித்தது. அத்துடன் அதனைச் செலுத்தத் தவறின் நான்கு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது.

குறித்த வழக்கினை நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேலதிக நீதிபதி ஏ.பிரேம்சங்கர் இத்தீர்ப்பை வழங்கினார். (பா)

□□□

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பகுதியில் அனுமதிக்கப்பட்டதிற்கு மேற்பட்ட 'கள்' வைத்திருந்த இருவர் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டபோது அவர்களுக்கு 7000 ரூபா தண்டம் விதித்து யாழ். நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

□□□

(யாழ்ப்பாணம்)

யாழ். மது பரிசோதகர்களினால் அனுமதியின்றி சாராயம் வைத்திருந்த நபர் ஒருவர் மீது யாழ். நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனை விசாரணை செய்த நீதிமன்றம் குறித்த நபருக்கு 5000 ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது. (பா)

# ஆரம்ப, இடைநிலை மாணவர்களுக்கு எழுத, வாசிக்க தெரிந்திருக்கவேண்டும்

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்

(யாழ் நிருபர்)

ஆரம்ப் பிரிவு வகுப்புக்களில் எல்லா மாணவர்களுக்கும் எழுத வாசிக்கத் தெரிந்திருக்க வேண்டும். இடைநிலை வகுப்புக்களில் எந்தவொரு மாணவரும் எழுத வாசிக்கத் தெரியாது என்று கூறக்கூடாது. எதிர்காலத்தில் இம்மாணவர்கள் எல்லோருமே எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருக்கத்தக்க வகையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் பொறுப்புணர்வுடன் தங்கள் பணியை மேற்கொள்ள வேண்டுமென்று துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் தெரிவித்தார்.

துணுக்காய் கல்வி வலய ஆரம்பக் கல்விப் பாடசாலை அதிபர்களுக்கு நடத்தப்பட்ட பாடப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்துகையில், தரம் 3,4,5 வகுப்புக்களில் கல்வி பயிலும் எல்லா மாணவர்களும் மொழியை எழுதவும், வாசிக்கவும், பிழையின்றிப் பேசவும் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்.

வாய்மொழி, ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களை மாணவர்களுக்கு ஆசிரியர்கள் நவீன கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்திச் சிறப்பான முறையில் கற்பிக்க வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலையும் பிள்ளை நேயப் பாடசாலையாகத் திழகவேண்டும். இளம் பிராயத்திலேயே சிறார்களுக்கு உரிய முறையில் கல்வி புகட்டப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

முப்பது பாடசாலைகளின் அதிபர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களான நா. சுவாமிநாதன், எஸ். மாதவகுமார் ஆகியோர் கலந்து கொண்டு மொழி, கணிதம் கற்பிக்கும் நுட்பங்கள் பற்றி விளக்கினர்.(10)

## உபகரணங்கள் கையளிப்பு

(கட்டுவன்)

வலி வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் தற்போது மீளக்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதாரத்தை முன்னெடுக்கும் நோக்குடன் FAO நிறுவனத்தினால் நேற்று முன்தினம் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்கு இப்பொருட்கள் பெரும் உதவியாக அமையவுள்ளதாக விவசாயிகள் நன்றி தெரிவித்தனர். (22)

## ஸ்கந்தபுரம் சந்தை அமைப்பதற்கு ஐம்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் சந்தை ஒன்றை அமைப்பதற்கான நிலம் மற்றும் நிதி ஒதுக்கீடு என்பன கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் இச்சந்தை அமைப்பதற்கான நிதியாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் 50 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதுடன் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளரினால் நீர்ப்பாசன திணைக்களக் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஸ்கந்தபுரம் பொதுச்சந்தை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (121)

## செய்தி மடல் வெளியீடு

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையினால் மாதாந்த செய்தி மடல் ஒன்று வெளியிடப்பட்டு வருவதாக பணிமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இச்செய்தி மடல் வலயக் கல்வி பணிமனையின் விபரங்கள், நிகழ்வுகள், பாடசாலைகளின் விபரங்கள், மாணவர்களின் விபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக வெளிவருகிறது. (121)

## நாடகப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகத்தால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற நாடகப் பயிற்சி நெறியின் புதிய பிரிவில் இணைத்துக் கொள்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அரங்கு தொடர்பான பயிற்சியைப் பெற விரும்பு பவர்களுக்கும் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களுக்கும் பயனுடையதாக இப்பயிற்சி அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பயில விரும்புவோர் யாழ். திருமறைக் கலா மன்ற அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு திருமறைக் கலாமன்ற பிரதி இயங்குநர் அறிவித்துள்ளார்.

## விடுமுறை

(கரணவாய்)

ஆடி அமாவாசையான இன்று சனிக்கிழமை நெல்லியடி வர்த்தக சங்கத்திற்குட்பட்ட வியாபார நிலையங்களுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக வர்த்தக சங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (18)

## கிளைத் தேர்தல் ஒத்திவைப்பு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை இக் கிளைத் தேர்தல் நடைபெறவிருந்தது. ஆனால், தவிர்க்க முடியாத காரணத்தால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (121)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் உறுப்பினர்களுக்கான பொதுக்கூட்டம் இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் எதிர்வரும் புனித ரமழான் நோன்பு சம்பந்தமான விடயங்களும், வீட்டுத் திட்டம், காணிப்பகிர்வு மற்றும் யாப்பு சம்பந்தமான விளக்கங்கள் தொடர்பாக கலந்துரையடப்படவுள்ளதாக செயலாளர் அஷ்சேஷ்க் வை. எம். அஸ்மி தெரிவித்தார். (105)

## சான்றிதழ் பரீட்சை


(யாழ்ப்பாணம்)

அஹதியா பாடசாலைக்கான இடைநிலைச் சான்றிதழ் பரீட்சை அகில இலங்கை ரீதியாக இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்படி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் பயிற்சி பெறும் அஹதியா மாணவர்களுக்கும் பரீட்சை நடைபெறுவதாக அதிபர் எம்.எஸ்.எம். முபாரக் தெரிவித்தார்.

இப்பரீட்சை மத்திய அஹதியா பாடசாலை சம்மேளனத்தின் பரீட்சை ஆணையாளர் ஏ.எல். ஸைனுல் ஆப்தீன் மேற்பார்வையில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (105)





யாழ்ரன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி கமலாம்பிகை லிங்கேஸ்வரன், தீவக வலய மாணவர் அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச. பாஸ்கரன் உரையாற்றுவதையும், அருகில் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலர் சி. பிரபாகரன், உயர்தர மாணவ மன்றத் தலைவர் ஜெ. சிவநேசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம். (44)

# "சிசுதிரிய" தேசிய வேலைத்திட்ட நிகழ்விற்கு வடமாகாணத்திலிருந்து 1500 மாணவர்கள்


(பருத்தித்துறை)

கஷ்டப் பிரதேசங்கள் மற்றும் முரண்பாடு இடம்பெற்ற பிரதேசங்களிலுள்ள மாணவர்களின் தலைமைத்துவத் திறன்களையும் ஆளுமைகளையும் விருத்தி செய்வதற்கான செயற்திட்டத்தின் (சிசுதிரிய தேசிய வேலைத்திட்டம்) 5 ஆம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தின் சமூக அபிவிருத்தி திட்ட அலுவலகத்தினர் நாளை முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை பல நிழ்வுகளை கொழும்பில் நடத்துவதற்கு ஒழுங்குசெய்துள்ளனர்.

இதன்பிரகாரம் ஒவ்வொரு வலயங்களிலிருந்தும் குறிப்பிட்ட தொகை மாணவர்கள் பங்குபற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி யாழ். கல்வி வலயத்தில் இருந்து 12 மாணவர்களும், வலிகாம வலயத்திலிருந்து 46 மாணவர்களும் தீவகத்திலிருந்து 130 மாணவர்களும், கிளிநொச்சியிலிருந்து 250 மாணவர்களும், துணுக்காய் வலயத்திலிருந்து 80 மாணவர்களும், மன்னார் வலயத்திலிருந்து 350 மாணவர்களும், மடு வலயத்திலிருந்து 20 மாணவர்களும், வவுனியா தெற்கு வலயத்திலிருந்து 360 மாணவர்களும் மற்றும் பௌத்த சம்புத்த ஜெயந்தியில் பங்குபற்றிய 252 மாணவர்களுமாக ஆயிரத்து 500 பேர் பங்குபற்றவுள்ளனர்.

மாணவர்கள் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்நிகழ்ச்சி சிறப்புற இடம் பெறுவதற்கு வலயங்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு வடமாகாண பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அறிவித்துள்ளார். (109)



வரலாற்று சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த தேர் உற்சவம் நேற்று நடைபெற்றவேளை முருகப் பெருமான் தேரில் ஆரோகணிப்பதைக் காணலாம்.

# சுயதொழில் கடனுதவி

(கட்டுவன்)

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள மக்களுக்கு சுயதொழிலை மேம்படுத்தும் நோக்குடன் மல்லாகம் சமுர்த்தி வங்கியினால் சுயதொழில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

17 பேருக்கு 14 இலட்சத்து 10 ஆயிரம் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் ஜே-218, ஜே-212, ஜே-227, ஜே-219, ஜே-217, ஜே-239, ஜே-229, ஜே-214 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 17 பேருக்கே இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. (22)

# புனித ரம்ழான் நோன்பை முன்னிட்டு யாழ். பள்ளிவாசல்களில் வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

உலக முஸ்லிம் மக்களின் புனிதமிகு ரம்ழான் மாதம் நாளை மறுநாள் ஆரம்பமாகின்றன. இம்மாதம் முழுவதும் பகலில் நோன்பு நோற்று இரவில் பள்ளிவாசல் சென்று தொழுகை வணக்கங்களில் முஸ்லிம்கள் ஈடுபடுவார்கள்

இவ்வருடம் யாழ்ப்பாணததில் உள்ள சகல பள்ளிவாசல்களிலும் ஐவேளை தொழுகைக்கான 'அதான்' ஒலிக்கப்படுகின்றன. புனித ரம்ழான் காலத்தில் நோன்பு நோற்பதற்காக முஸ்லிம் மக்கள் தயாராகவுள்ளார்கள்.

பள்ளிவாசல்களில் தினமும் ஐந்து நேரத் தொழுகையுன் தராவிஹ், வித்ர் தொழுகைகளும் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன.

நோன்பு நோற்று அதை மாலைவேளையில் ம:.ரிப் நேரத்தில் நோன்பை நிறைவு செய்யும் பொருட்டு இப்தார் நிகழ்வும் ஜும்மா பள்ளிவாசல்களில் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் நடைபெறவிருப்பதாக பள்ளிவாசல்கள் நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

புனித ரம்ழான் காலத்தில் பள்ளிவாசல்களில் விசேட 'பயான்' மார்க்க சொற்பொழிவுகளும் இடம்பெறவிருப்பதாக உலமாக்கள் தெரிவிக்கின்றார்கள்.

எனவே இந்த விசேட பயான்மார்க்க சொற்பொழிவுகளிலும், தொழுகைகளிலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (105)

# பாடசாலைகளுக்கான விடுமுறை திகதி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ், சிங்கள பாடசாலைகள் அனைத்தும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி மூடப்பட்டு மீண்டும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதி மூன்றாம் தவணை ஆரம்பத்திற்காக திறக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் எச்.எம். குணசேகர அறிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் பாடசாலைகள் அனைத்துக்கும் புனித ரம்ழானை முன்னிட்டு இரண்டாம் தவணை விடுமுறை நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், மூன்றாம் தவளை விடுமுறை எதிர்வரும் செப்ரெம் பர் 5 ஆம் திகதி ஆரம்பிக் கப்படவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இப்பெல்லாம் அந்த மாதிரி உசாரில்லைப் பாருங்கோ! நான் நினைச்சுப் பாக்கிறன். இடைப்பட்ட காலமொண்டு இருந்துது.

தேர்தல் துவங்க முன்னமே எதிர்பார்ப்பு அந்த மாதிரி இருக்கும். நொமினேசன் காசு கட்டுற அண்டும், ஒவ்வொரு பகுதி இடங்களில பிரசாரக் கூட்டங்கள் நடக்கிற நாட்களிலும் ஒரே ஆரவாரம்தான்.

போட்டி போட்டுத் துண்டுப் பிரசுரங்கள் ஒட்டுறதிலயும் சனங்களுக்குக் குடுக்கிறதிலயும் தெருக்கள் வீடு, வாசல்களில் சின்னங்களைக் கீறி விடுறதிலயும் வாசகங்களை எழுதுறதிலயும் இரவிரவா நித்திரை கிடையாதெண்டாப் பாருங்கோவன்.

விடிய எழும்பிச் சனம் நடமாடத் தொடங்கினாத்தான் சண்டை இருக்கு. தன்ரை வீட்டு மதிலைப் பழுதாக்கிப் போட்டதாகவும், இன்னும் அவருக்கெதிரான வேட்பாளரின் வாசகங்களை அவரது சுவரில் எழுதிப் போட்டதாகவும் சண்டையள் துவங்கீடும்.

சிலவேளைகளில் பேச்சு வாக்குகளுடன் முடிஞ்சு வாசகங்களையும், துண்டுப் பிரசுரங்களையும் தண்ணி மற்றும் மண்ணெண்ணெயால அழிப்பதோடும் துண்டுப் பிரசுரங்களைக் கிழிப்பதோடும் முடிஞ்சிடும்.

அது பொலிசு, கோட்டு எண்டும் இழுபட்டு ஆசுப்பத்திரி வழிய அலைஞ்சுலைஞ்சும் இது‥ளில வேட்பாளர்களும் தங்கட தங்கட செல்வாக்கைக் காட்டி முடிவுக்குக் கொண்டு வாறதும் உண்டு.

இந்தக் காலத்தில அப்பிடியொண்டும் பிரமாதமாக நடக்கேல்ல. எண்டாலும் அண்டைக்கொருநாள் சந்தீல இருக்கிற தேத்தண்ணிக் கடைக்கு போனன் பாருங்கோ!

கனநாளாக் காணாத பழைய நண்பரொருவரைக் கண்டன், அவருக்கு இப்ப அறுபது எழுபது வயதுதானிருக்கும். சாடைமாடையாகக் கதைக்கத் தொடங்கினார்.

கிட்டடீல பேப்பர்களில வந்த செய்தியளில வெளிக்கேட்டில நாயின்ர தலை தொங்கினதும், கழிவு ஒயில் அபிசேகம் பற்றியும் கதைச்சார்.



நான் சொன்னன் ஆதரவு தேடுறதுக்காக அவையளும் அதைச் செய்திருக்கலாந்தான எண்டதும் அவருக்கு வந்த கோவத்தைப் பாக்கவேணும் ஆச்சோ போச்சோ எண்டு துள்ளிக் குதிச்சு நீயுமொரு தமிழனா அவங்களிட்டை வாங்கித் திண்டுட்டுத்தான உப்புடிக் கதைக்கிறாயெண்டு என்னோட சண்டைக்கு வந்திட்டான் மனிசன்.

எனக்கு வந்த கோவத்தில அவர் மேல பாஞ்சு குதறியிருப்பன், நிண்டதுகள் ஒரு மாதிரிச் சேப் பண்ணிப் புடிச்சு விட்டுட்டுதுகள். இல்லாட்டி இண்டைக்குநான் எங்கை இருக்கிறனோ ஆர் கண்டது.

# துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தினால் சங்க அங்கத்தவ பணியாளர்களுக்கு 35 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 20 ஆண்களுக்கான துவிச்சக்கர வண்டிகளும் 15 பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிகளும் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் சங்கத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் நிதியுதவியுடனும் சங்க அபிவிருத்தி நிதியுதவியுடனும் இத்துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (101)

# ஆத்மசாந்தி வழிபாடு

(யாழ்.நிருபர்)

காரைநகர் பலகாடு அமரர் இராமலிங்கம் திருவாதிரையின் உருவப்படத் திரைநீக்கமும் ஆத்மசாந்தி வழிபாடும் இன்று ஆடி அமாவாசை திதியன்று காரைநகர் வியாவில் கணபதீஸ்வரக் குருக்கள் நூலகத்தில் நடைபெறவுள்ளது.

வியாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் மகாராணி க.சோமசேகரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

செஞ்சொற்செல்வர் தேசபந்து இரா. செல்வவடிவேல் சிறப்பு அதிதியாகவும், ஆசிரியர் ந.கணேசமூர்த்தி கௌரவ அதிதியாகவும் கலந்து கொள்கின்றனர். (10)

# குடிநீர் விநியோகத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை பிரதேசத்திற்கான குடிநீர் வழங்கலை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது துண்டிப் பகுதிக்கு குழாய் வசதி மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

அதனைவிட ஆனந்தவடலி வீதி மற்றும் கிழக்குப் பகுதிக்கான குடிநீர் வழங்கலை விரைவில் விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். மாநகராட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(30.07.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆடி 14 ஆம் நாள்.

இராகுகாலம் 9.03–10.33, சுபநேரம் 3.03 –4.33,

நட்சத்திரம் புநர்பூசம் காலை 7.45 வரை

திதி: அமாவாசை பி.இ 12.37 வரை,

ஆடி அமாவாசை விரதநாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, திடீர் பயணம், மன் நிம்மதி, தியாக உணர்வு.

**ரிஷபம:–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தியாக உணர்வு, தேக ஆரோக்கியம், கடன் தொல்லை.

**மிதுனம் :–** குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், இரக்க சிந்தை, தியாக உணர்வு, மனத்தில் சஞ்சலம்.

**கடகம்:–** பணக்கஷ்டம், குடும்பத்தில் மகிழ்ச்சி, தயாள குணம், இரக்க சிந்தை, விருந்தினர் வருகை.

**சிம்மம்:–** பணக்கஷ்டம், தேக நிலை நன்று, இரக்க சிந்தை, அதிகாரப் போட்டி, விபத்து வரலாம்.

**கன்னி :–** பணக் கஷ்டம், தேக ஆரோக்கியம், மனச் சஞ்சலம், தியாக உணர்வு, கடன் வாங்குதல்.

**துலாம் :–** பணவரவு, தேக ஆரோக்கியம், சிரிப்பும் மகிழ்ச்சியும், விருந்தினர் வருகை, சயன சுகம்.

**விருச்சிகம்:–** பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, விருந்தினர் வருகை, சயன சுகம்.

**தனுசு:–** பணக் கஷ்டம், தேக நிலை பாதிப்பு, இரக்க சிந்தை, நண்பர் தொல்லை, கடன் வாங்குதல்.

**மகரம:–** பணவரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, மனதில் மகிழ்ச்சி, இரக்க சிந்தை, சயனசுகம்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, இரக்க சிந்தை, அதிகாரப் போட்டி, கடன்தொல்லை.

**மீனம்:–** பணவரவு, குடும்பத்தில் குதூகலம், சிரிப்பும் மகிழ்ச்சியும், அதிகாரப் போட்டி, தியாக உணர்வு.

## விளையாட்டுச் செய்திகள்

# நேபாள கால்பந்தாட்ட சுற்றில் மன்னார் மாணவனும் பங்கேற்பு



(மன்னார்)
மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் சத்திய சீலன் சஜீவன் என்ற மாணவன் அகில இலங்கையில் 17 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட வீரர்களில் மிகச் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு நேபாளத்தில் நடைபெறவுள்ள கனிஷ்ட தெற்காசிய அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் கலந்து கொள்வதற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் பயணத்திற்கு உதவித்தொகையாக மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர் ஜஸ்வினின் முயற்சியில் மன்னார் விவசாயத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் என். சிவலிங்கம் 30 ஆயிரம் ரூபாவினை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன் ஊடாக குறித்த வீரரின் தாயாரான மேரி மரிஸ்ரலாவிடம் வழங்கினார்.

இதேவேளை மன்னார் மாவட்ட கால்பந்தாட்ட உதவிச் செயலாளரும் பொலிஸ் அதிகாரியுமான கே.காந்தன், இலங்கை கால்பந்தாட்டத்தின் செயலாளரும், மன்னார் மாவட்ட உதைப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளருமான அன்ரனும் உடனிருந்தார்.

# செஸ்ஸில் வெற்றியீட்டியவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன



ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர்களுக்கான செஸ் விளையாட்டுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி எஸ்.எம்.எம். இஸ்மாயில் பிரதம அதிதியாக, மற்றும் பல்கலைக்கழக பதிவாளர் எச்.அப்துல் சத்தார் ஆகியோர் கலந்துக்கொண்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

இப்போட்டி கடந்த 24 ஆம் திகதி இப்போட்டி ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு வெண்கலம்

(கொழும்பு)
பிரேஸிலில் நடைபெற்ற 52ஆவது உலக முப்படை வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் 100x4 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை வெண் கலப்பதக்கத்தை வென்றது. முஹம்மது ஸப்ரான் தலைமையிலான அணி வெண்கலம் வென்றது.

இதேவேளை 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இறுதிப் போட்டி வரை முன்னேறிய ஸப்ரான் 4 ஆவது இடத்தைப் பிடித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

வெலிகம வெலிப்பிட்டிய ஸாஹிரா மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற இவர் 2007 ஆம் ஆண்டு மாத்தளையில் இடம் பெற்ற தேசிய விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் போட்டியில் முதலிடம் பெற்றார். இது தவிர, பெங்கோக், போர்த்துக்கல் போன்ற நாடுகளுக்கும் இவர் இலங்கை சார்பாக விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்க்கது.

மேலும் இவர் வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டப் போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. சப்ரான் பதக்கத்துடன் காணப்படுகின்றார்.

# அரையிறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)
யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் நடாத்தும் வீ.டி. ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்திற்கான 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டித் தொடரின் அரையிறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

இரு அணிகளும் பலம் வாய்ந்தமையால் இப்போட்டி மிகுந்த விறுவிறுப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# முன்பள்ளிகளின் விளையாட்டுப்போட்டி

(பருத்தித்துறை)
வடமராட்சி வலய முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. தில்லைநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் பிரதம விருந்தினராகவும் வித்தியாலய அதிபர் செ. சேதுராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# ஒலிம்பிக் போட்டியில் கபடிக்கும் வாய்ப்பு

## ஹொன்னப்ப கௌடா


(புதுடில்லி)
வருங்காலங்களில் ஒலிம்பிக் போட்டியில் கபடி இடம் பெற வாய்ப்புள்ளதாக அர்ஜுனா விருது வென்ற இந்திய கபடி வீரர் சி.ஹொன்னப்ப கௌடா தெரிவித்தார்.


கபடி முன்பு கை, கால்களில் பலத்த காயங்கள் ஏற்படுத்தக் கூடிய விளையாட்டாக இருந்தது. ஆனால், இப்போது தொழில்நுட்பம் சார்ந்த விளையாட்டாக மாறிவிட்டது. கபடியில் இப்போது நம் நாடு முதலிடத்தில் உள்ளது. ஐரோப்பிய நாடுகளும் இப்போது அதிக அளவில் கவனம் செலுத்தி வருகின்றன.

அந்த நாடுகள் உள் விளையாட்டு அரங்கு, செயற்கை ஆடுகளம் போன்றவற்றுடன் தயாராகி வருகின்றன. எனவே, வருங்காலங்களில் ஒலிம்பிக் போட்டியில் கபடியை சேர்க்க வாய்ப்பு இருக்கிறது.

இந்திய கபடி அணி சிறப்பாக இருந்தாலும், அடுத்த 10 ஆண்டுகளில் கடும் நெருக்கடியைச் சந்திக்கும் சூழ்நிலை உள்ளது. சர்வதேசப் போட்டிகளுக்கு இணையான செயற்கை ஆடுகளம், உள் விளையாட்டரங்கு போன்றவை இந்தியாவில் இல்லாததே அதற்குக் காரணம். எனவே, இந்த வசதிகளைப் பரவலாக ஏற்படுத்த வேண்டும்.

இதற்கேற்ற வகையில் இளம் வீரர்களையும் உருவாக்க வேண்டும். அதற்கு அவர்களும் ஒத்துழைக்கு வழங்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.





வத்திராயன் மத்திய விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட கால்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற கட்டைக்காடு சென்மேரிஸ் அணித் தலைவருக்கு வடமராட்சி கிழக்கு சிவில் அதிகாரி கேணல் சில்வா வெற்றிக் கேடயம் வழங்குவதையும், அருகில் மத்தி விளையாட்டுக்கழகத் தலைவர் மனோகரன் றதீஸ் நிற்பதையும், இரண்டாமிடத்தைப் பெற்ற உடுத்துறை செந்தமிழ் அணித் தலைவருக்கு மேஜர் வைத்திய திலக வெற்றிக்கேடயம் வழங்குவதையும் காணலாம். இப்போட்டி அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (38)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி வெற்றிபெற்றுள்ள அணிகள்

(மட்டுவில்)
மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் 46ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியில் கடந்த புதன்கிழமை இரவு 7.00 மணிக்கு நடைபெற்ற போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் 'பி' அணியும், கைதடி மின்னொளி அணியும் மோதியது.

இதில் மட்டுவில் மோகனதாஸ் 'பி' அணி 2:0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு போட்டியில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் அணி மோதியது. இதில் 2 : 0 என்ற செட் கணக்கில் நீர்வேலி ஐக்கிய அணி வெற்றிபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து கோப்பாய் ஐக்கிய அணி மோதியது. இதில் 2 : 0 என்ற செட் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் நுணாவில் வளர்மதி அணியை எதிர்த்து கைதடி நவசக்தி அணி மோதியது. இதில் 2 : 1 என்ற செட் கணக்கில் நுணாவில் வளர்மதி அணி வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்று இரவு 7.00 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் 'ஏ' அணியை எதிர்த்து கைதடி குமரன் அணி மோதவுள்ளது. மற்றுமொரு போட்டியில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து நாயன்மார்கட்டு பாரதி அணி மோதவுள்ளது.

மின்னொளியில் போட்டிகள் யாவும் இடம்பெற்று வருவதால் ரசிகர்களின் வருகையும் அதிகரித்திருப்பதாகவும், அடுத்து வரும் போட்டிகள் யாவும் பரபரப்பை ஏற்படுத்தக்கூடிய வகையில் ரசிகர்களும் அமையும் எனறும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (118)




மைலோ கின்ன யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் 18 வயதுப்பிரிவில் முதலாம் இடம்பிடித்த தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியையும், இரண்டாமிடம் பிடித்த யாழ்ப்பாண கல்லூரி அணியையும் காணலாம். (12)

## நீச்சல் போட்டியில் புதிய உலக சாதனை

(ஷாங்காய்)

உலக நீச்சல் சம்பியன் ஷிப் போட்டி சீனாவில் உள்ள ஷாங்கா்ய் நகரில் நடந்து வருகிறது. இதில் ஆண் களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்லே பந்தயத்தில் அமெரிக்க வீரர் ரையான் லோச்டே 1 நிமிடம் 54 வினாடியில் பந்தய தூரத்தை கடந்து புதிய உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார். அவர் தனது பழைய சாதனையை 0.10 வினாடி வித்தியாசத்தில் முறியடித்தார். ஒலிம் பிக் சம்பியனான அமெரிக்க வீரர் மைக்கேல் பெல்ப்ஸ் 1 நிமிடம் 54.16 வினாடியில் கடந்து வெள்ளிப்பதக் கமே பெற்றார்.

## மக்கள் விருது பட்டியலில் சங்கக்கார, டோனி பெயர்கள்

(துபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் 2011ஆம் ஆண்டுக்கான மக்கள் விருது பட்டியலில் இலங்கை அணியின் துடுப் பாட்ட வீரர் சங்கக்கார மற்றும் இந்திய அணித் தலைவர் டோனி ஆகியோரின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவர் களுடன் தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் அம்லா, மேற் கிந்தியத்தீவு அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல் ஆகியோரின் பெயரும் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

ஆகஸ்ட் 25 முதல் இதற்கான வாக் கெடுப்பு நடைபெறவுள்ளது. www.lgpeopleschoice.com என்ற இணையத் தின் மூலம் உலகம் முழுவதிலும் உள்ள கிரிக்கெட் ரசிகர்கள் சிறந்த வீரரைத் தேர்வு செய்வார்கள். மக்கள் விருதுக்கு தேர்வு செய்யப்படும் வீரரின் பெயர் செப்டம்பர் 12ஆம் திகதி அறிவிக்கப்படும்.

இந்த விருது இப்போது இரண்டாவது முறையாக வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு முதல் முறையாக இந்த விருது வழங்கப்பட்டபோது, அதை இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண் டுல்கர் தட்டிச்சென்றமை குறிப்பிடத் தக்கது. அண்மையில் வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்ட ஐ.சி.சி.யின் கனவு அணியில் இடம்பெற்ற வீரர்கள் குறித்தும் சரச்சை எழுந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக் பதக்கங்கள் மக்களின் காட்சிக்கு



(லண்டன்)

2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய விபரங்கள் பொதுமக்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டது.

ஒலிம்பிக் பதக்கங்கள் 88 மில்லி மீற்றர் அகலம் 7 மில்லி மீற்றர் தடிமண் கொண்டதாக உள்ளன. இவை 375 - 400 கிராம் எடை கொண்டதாக இருக்கிறது. இதுவரை நடந்த கோடைகால ஒலிம்பிக் போட்டிகளில் வழங்கப்பட்ட பதக்கத்தை காட்டிலும் லண்டன் ஒலிம்பிக் பதக்கம் பெரிதாக உள்ளது.

4 முறை ஒலிம்பிக் படகு போட்டியில் சம்பியன் ஆனவர் சர் மாத்யு வின்செண்ட். அவர் 1992 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை ஒலிம்பிக் பதக்கங்கள் வென்றார். அந்த பதக்கங்களை விட தற்போதைய லண்டன் பதக்கம் பெரியதாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்த ஒலிம்பிக் பதக்கத்தை டேவிட் வாட்கின்ஸ் வடிவமைத்துள்ளார்

## சக வீரர்களை ஊக்குவிக்க பொன்மொழி கூறும் சேவாக்

(மும்பை)

இந்திய அணியை ஊக்குவிக்கும் விதமாக அதிரடி வீரர் சேவாக் தனது டுவிட்டரில் பொன்மொழிகள் கூறி யுள்ளார்.

பயத்தில் காலத்தைச் செலவழிப்பது என்பது வருமானம் இல்லாமல் ஓவர்-டைம் வேலை பார்ப்பதற்குச் சமம். உங்களைவிட சிறந்தவர்கள் இல்லை, உன்னை நம்பு,எப்போதும் அஞ்சாதே.

வெற்றி என்பது கடின உழைப்பு என்ற சக்கரத்தில் ஓடும் வாகனம், ஆனால் தன்னம்பிக்கை என்ற எரி பொருள் இல்லாமல் பயணம் சாத்திய மில்லை.

இவைதான் இந்திய அணிக்கான சேவாகின் ஊக்குவிப்பு பொன்மொழி கள்.

தோள்பட்டைக் காயம் காரணமாக முதல் 2 டெஸ்ட் போட்டிகளுக்கு விளை யாட முடியாத சேவாக் இந்திய அணியை தற்போது டுவிட்டர் பக்கத்தில் தனது தைரிய வார்த்தைகளால் ஊக்கு வித்துள்ளார்.

சேவாக் இந்தத் தொடரில் இல்லாதது மிகப்பெரிய இழப்பு என்று ஆஸ்ட்ரேலிய கிரிக்கெட் மேதை இயன் சாப்பல் இந்தத் தொடருக்கு முன்னமேயே கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆண்கள் கால்பந்தாட்ட அணியில் பெண்ணொருவருக்கும் அனுமதி

குரோஷியாவில் ஆண்கள் கால் பந்தாட்ட அணியொன்றில் இணைந்து போட்டிகளில் பங்குபற்றுவதற்கு பெண் ணொருவர் அனுமதி பெற்றுள்ளார்.

நைவ்ஸ் செல்சியஸ் என்ற இந்த வீராங்கனை ஸ்லேவன்பெலுபோ எனும் ஆண்கள் அணியில் இணைந்து விளை யாடவுள்ளார்.

இதே அணியில் விளையாடும் டினோ டிர்பிக் என்பவரின் மனைவி இவர்.

பாடகியும் 'மொடல் அழகியும்' எழுத் தாளருமான நைவ்ஸ் செல்சியஸ், குரோ ஷியா கால்பந்தாட்ட லீக்போட்டியொன் றின் முடிவில் வெற்று அரங்கில் தனது கணவருடன் உடலுறவில் ஈடுபட்டதாக அறிவித்து சர்ச்சையை ஏற்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது ஆண்கள் அணியில் இணைந்து விளையாடப்போவதாக அறி வித்துள்ளதன் மூலம் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் நைவ்ஸ் செல்ஸியஸ்.

ஆண்கள் அணியில் பெண்கள் விளையாட அனுமதிக்க விதிகளில் இடமுண்டா என்பதை அந்நாட்டு கால் பந்தாட்ட அதிகாரிகள் ஆராய்ந்து வரு கின்றனர்.

எனினும் போட்டியில் தனது நிலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் தான் கவலையடையவில்லை என நைவ்ஸ் கூறியுள்ளார்.

எனது கணவரே எனது பயிற்றுநர். நாங்கள் அதிகளவு பயிற்சிகளை பெற் றுள்ளோம்" என்று நைவ்ஸ் செல் சியஸ் தெரிவித துள்ளமை குறிப் பிடத்தக்கது.



நைவ்ஸ் செல்சியஸ்

## காதல் வலையில் வோஸ்னியாக்கி



ரென்னிஸ் அரங்கின் அழகுப்புயல் என்று வர்ணிக் கப்படும் கரோலின் வோஸ்னியாக்கி காதல் வலையில் விழுந்துள்ளார். பிரபல கோல்ப் வீரர் ரோரி மெக்கில்ராயுடன் மிக நெருக்கமாக பழகுகிறாராம்.

இவருக்கும் அமெரிக்க கோல்ப் வீரர் மெக்கில் ராயுக்கும் காதல் என்ற செய்தி அடிபட்டது. இதனை உறுதி செய்யும் விதமாக, சமீபத்திய விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் போது மெக்கில்ராயை காண முடிந்தது. அரங்கில் இருந்தவாறு வோஸ்னியாக்கியின் ஆட்டத்தை ரசித்து பார்த்தார். பின் ஜேர்மனியில் நடந்த டேவிட் ஹை-விலாடிமிர் கிலிட்ச்கோ இடை யிலான குத்துச்சண்டை போட்டியை இருவரும் அரு கருகே அமர்ந்து பார்த்துள்ளனர். இதனை தொடர்ந்து லண்டனுக்கு ஒன்றாக பறந்த இவர்கள், தனியாக இரவு சாப்பிட்டுள்ளனர். அந்த தனிமையான தருணத்தில் இருவரும் முத்தங்களை பரிமாறிக் கொண்டு பரபரப்பு ஏற்படுத்தியுள்ளனர்.

தங்களது டுவிட்டர் இணையதள செய்தியில் இருவரும் ஜாலியாக கருத்துக்களை பகிர்ந்து கொண்டுள்ளனர். உதாரணமாக 21ஆவது பிறந்த நாள் கொண்டாடிய வோஸ்னியாக்கிக்கு அனுப்பிய வாழ்த்து செய்தி யில்,உனக்கு வயதாகிக் கொண்டே போகிறது, என, மெக்கில்ராய் குறிப்பிட்டுள்ளார். பதிலுக்கு, குடிப்பதற்கு தகுதியான வயதை எட்டி விட்டதால், எனக்கு சட்டப்படி நீங்கள் மது வாங்கித் தரலாம் என, வோஸ்னியாக்கி கூறியுள்ளார்.

வோஸ்னியாக்கிக்கு இந்த காதல் அனுபவம் புதியது. ஆனால், கோல்ப் அரங்கில் நடப்பு யு.எஸ்.சாம்பியனான 22 வயது மெக்கில் ராய்க்கு இது இரண்டாவது காதல். ஏற் கனவே தனது இளம் பருவ தோழியான ஹோலி ஸ்வீனியை நீண்ட காலம் காதலித்தார். கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையின் போது ஸ்வீனியுடனான உறவை முறித்துக் கொண்டார். இரு வரும் முறைப்படி பிரிந்தனர்.

பின் வோஸ்னியாக்கியை கண்டதும் மெக்கில்ராய்க்கு காதல் பிறந்துள்ளது. இதற்கு, தனது முன்னாள் காதலியான ஸ்வீனியின் தோற்றத்தில் வோஸ்னி யாக்கி இருந்தது தான் முக்கிய காரண மாம். இருவரும் நல்ல உயரம் கொண்ட வர்கள். தவிர, இருவரது கூந்தலும் பொன்னிறத்தில் உள்ளதாம்.

# பொன்சேகா மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகாவிறகு எதிரான இரண்டாவது இராணுவ நீதிமன்றில் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தின் தீரப்புக்கு எதிராக சரத் பொன்சேகா தாக்கல் செய்துள்ள மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எரிக் பஸ்நாயக்க, ஏ.டபிள்யூ.ஏ.சலாம் மற்றும் உபாலி அபேரத்ன ஆகிய மூவர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் கருத்துக்களை முன்வைத்த சட்டத்தரணி இராணுவ சட்டத்திற்கு அமைவாகவே குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்றதாகக் கூறினார்.

தாம் இராணுவ நீதிமன்றத்தின் நீதிபதிகள் சார்பில் வாதிட்டபோதிலும் இந்த தெளிவுபடுத்தல் ஒட்டுமொத்த இராணுவத்தினருக்காகவுமே மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

நாட்டினதும் இராணுவத்தினதும் சட்டதிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணை அரசியல் அமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பபட்டுள்ள அதிகாரத்தினூடாக உறுதி செய்யப்பட்டதாக சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்தன குறிப்பிட்டார்

ஜனாதிபதிக்கு கிடைத்துள்ள அதிகாரங்கள் நாட்டு மக்களின் இறைமையை. அடிப்படையாக் கொண்டவை.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் போது தாம் இராணுவ சட்டத்திற்கு உட்பட்டவராக இருக்கவில்லை என சரத் பொன்சேகா கூறியிருந்தாலும், இராணுவ சட்டத்திற்கும், படைகளின் பிரதம அதிகாரி சட்டத்திற்கு அமைய அவர் இராணுவ சட்டத்திற்கு உட்பட்டவர் என்பது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# குற்றச்செயலில் ஈடுபட்டு தண்டனை பெற்ற ஐந்து இலட்சம் பேர் நாடு முழுவதும் உள்ளனர்

(கொழும்பு)

குற்றச் செயல்களில் ஈடுபட்டு தண்டனை அனுபவித்த ஐந்து இலட்சம் பேர் நாடு முழுவதிலும் சமூகத்துடன் இணைந்து வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலை, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக இவர்கள் தண்டனை அனுபவித்துள்ளனர்

பொலிஸ் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அண்மைய புள்ளி விபர அறிக்கையில் இந்த விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த ஐந்து இலட்சம் பேரில் 40, 000 பாரிய குற்றவாளிகள் உள்ளடங்குகின்றனர். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தண்டனை அனுபவித்த குற்றவாளிகளே பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நாடு முழுவதிலும் உள்ள சிறைச்சாலைகளில் 46 பட்டதாரிகள் தண்டனை அனுபவித்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட மற்றும் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான சந்தேகத்தின் பேரில் 32,128 பேர் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் 2,845 பேர் எந்தவிதமான கல்வியறிவும் இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

# பொறுப்பற்ற காணொளிகளை வெளியிடும் சனல் 4 இற்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## பிரிட்டனைக் கோருகிறார் பாதுகாப்புச் செயலர்

(கொழும்பு)

**பொறுப்பற்ற காணொளிகளை வெளியிடும் சனல்-4 தொலைக்காட்சி மீது நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.**



சரணடைய வரும் புலிகளின் தலைவர்களை கொன்று விடுமாறு மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவுக்கு, கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்ததாக சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட காணொளி குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கோரியுள்ளார்.

புதன்கிழமை இரவு சனல்-4 ஒளிபரப்பிய புதிய காணொளியில் இராணுவத்தைச் சேர்ந்த இருவர், சரணடையும் புலிகளின் தலைவர்களை கொன்று விடுமாறு கோத்தபாய ராஜபக்ஷவும் மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வாவும், படையினருக்கு உத்தரவிட்டிருந்ததாக கூறியிருந்தனர்.

இது ஒரு பொய்யான பரப்புரை என்று கூறியுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, புலிகள் சரணடைவது தொடர்பாக ஐ.நாவின் பிரதிநிதி நீல் புனே தகவல் எதையும் தெரிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போரின் இறுதிநாட்களில் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா மதிப்பீடு செய்துள்ளதாக அவரால் எவ்வாறு கூற முடியும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் பதிவுகளின் படி 300,000 பேரே அங்கிருந்தனர். ஆனால் போரின் முடிவில 294,000 பேர் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஏனையவர் புலிகள் என்றும் அவர்கள் போரில் கொல்லப்பட்டு விட்டனர் என்றும் சிலர் கனடாவுக்கும் இந்தியாவுக்கும் தப்பி விட்டனர் என்றும் கூறியுள்ள கோத்தாபய ராஜபக்ஷ, சூசை, தமிழ்ச்செல்வன் ஆகியோரின் குடும்பத்தினருக்கு தாம் பாதுகாப்பு வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்ற போது சூசையின் குடும்பத்தினர் பிடிபட்டனர் என்றும், கடற்படையினர் அனைவரினதும் மரணங்களுக்கு காரணமான சூசையின் குடும்பத்தினரை தம்மால் கொன்றிருக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை இந்த காணொளியில் தோன்றும் இருவரும் படையினர் அல்ல என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல கூறியுள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சி முன்னைய தமது காணொளிகளை நியாயப்படுத்தவே இதை வெளியிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது அதிகாரிகளோ படையினரோ வெளிநாட்டு ஊடகம் எதற்கும் செவ்வியோ அல்லது குரல் பதிவையோ வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள மேஜர் ஜெனரல் மெதவெல, சனல்- 4 தொலைக்காட்சியில் தோன்றும் இருவரும் இராணுவத்தைச் சேர்ந்தவர்களே அல்ல என்றும் கூறியுள்ளார்.

படையினருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் புலம்பெயர்ந்தவர்கள் மேற்கொள்ளும் பொய்யான பரப்புரை இது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஈராக்கிலுள்ள 41இலங்கையர்களை விரைவில் அழைத்துவர ஏற்பாடு

(கொழும்பு)

ஈராக்கில் தங்கியுள்ள 41 இலங்கை பணியாளர்களை எதிர்வரும் இரண்டு வாரத்திற்குள் நாட்டிற்கு அழைத்துவர உள்ளதாக வெளிவிவாகர அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு பணியாட்களாகச் சென்று பல வருடங்களாக ஊதியம் வழங்கப்படாத நிலையில் 41 இலங்கையர்கள் அங்கு தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்து இந்த 41 இலங்கையர்களும் அண்மையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்நிலையில் வெளிவிவகார அமைச்சு ஈராக் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி இவர்களை நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளது.

ஈராக்கில் தங்கியுள்ள 41 இலங்கையர்களுக்கும் 350,000 ரூபாவரை வழங்க அந்த நாட்டு அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# சனல் - 4 வெளியிட்ட காணொளிக்கு ஆணைக்குழு முக்கியத்துவம் வழங்காது

(கொழும்பு)

இலங்கையில் நடந்ததாகக் கூறப்படும் யுத்தக் குற்றம் தொடர்பில் சனல் 4 அலைவரிசையின் மூன்றாவது வீடியோ அண்மையில் வெளியிடப்பட்டுள்ள நிலைமையில், பலரும் நினைப்பது போல சனல் 4 இன் வீடியோக்களுக்கு தனது அறிக்கையில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படமாட்டாது என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு கூறியுள்ளது.

"எமது அறிக்கை, வழங்கப்பட்ட ஆணைக்குள் அமையும் விடயங்களில்தான் முக்கிய கவனத்தை செலுத்தும். எமது அறிக்கை இந்தப் பிரச்சினைக்குரிய வீடியோ பற்றிய கருத்துக்களை கூறினாலும் அதற்கு முக்கியத்துவம் வழங்க மாட்டாது" என ஆணைக்குழு கூறியுள்ளது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு, சனல் -4 அலைவரிசையின் முதலாவது வீடியோவை ஆராய்வதற்கு கணினி நிபுணரான சத்துரடி சில்வாவின் சேவையைப் பெற்றிருந்தது. இரண்டாவது வீடியோவை ஆணைக்குழு ஆராயவுள்ளது. மூன்றாவது வீடியோவை ஆணைக்குழு இன்னும் பார்வையிடவில்லை.

இதேவேளை, ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கரன உயர்ஸ்தானிகர் நவநீதம் பிள்ளை, யுத்தக் குற்றம் தொடர்பில் ஆராய்வதற்கு இலங்கை தொடர்ந்தும் தாமதிக்குமாயின், அதன் மீது சர்வதேச சமுதாயம் நடவடிக்கை எடுக்கும் நோக்கில் உள்ளது என கூறியுள்ளார்.

# பல்கலைக்கழக உபவேந்தர்கள் குழு மூன்று விடயங்கள் குறித்து இணக்கம்

(கொழும்பு)

பல்கலைக்கழக உபவேந்தர்கள் குழு மூன்று விடயங்கள் குறித்து இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதென றூஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுசிரின் மெண்டிஸ் தெரிவித்தார். பல்கலைக்கழக உபவேந்தர்கள் குழு நேற்று முன்தினம் கொழும்பில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளது.

இதன்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்படி விரிவுரையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பின்வரும் மூன்று விடங்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

.தொழிற்சங்க நடவடிக்கையை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நிறுத்தியமையை வரவேற்றல் தொழிற்சங்க நடவடிக்கையின் போது விரிவுரையாளர்களால் வழங்கப்பட்ட சுயாதீன பதவிகளில் இருந்து விலகிக் கொள்வதற்கான இராஜினாமா கடிதத்தை நிர்வாக சபை ஏற்றுக் கொள்ளாததால் அதற்கென புதிய நியமனங்கள் வழங்கப்படாதிருத்தல்

.இராஜினாமா கடிதத்தை சமர்பித்த பிரதானிகளிடம் பதவிகளை மீண்டும் ஏற்றுக் கொள்ளுமாறு கோருதல் என்பவை அந்த மூன்று இணக்கப்பாடுகளாகும்.

# கிழக்கு முதல்வரின் கட்சியைச் சேர்ந்த அறுவர் மன்னாரில் தங்கியிருந்தவேளை கைது

(கொழும்பு)

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த 6 பேர் இந்தியாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கில் மன்னாரில் தங்கியிருந்த நிலையில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து முப்படையினரின் உதவியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

மட்டக்களப்பு மாவட்டம் புதூர் வங்கி ஒன்றில் இருந்து கடந்த மாதம் பல கோடி ரூபாய் பணம் மற்றும் நகைகள் கொள்ளையடித்துச்செல்லப்பட்டது.

இந்தச சம்பவத்திற்கு பின்னணியில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் என அழைக்கப்படும் பிள்ளையானின் குழு ஒன்று செயறபட்டு வந்ததாக தகவல்கள் வெளியாகி இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மன்னார் மூ[illegible]ர் வீதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் குறித்த வங்கிக் கொள்ளையுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் சிலர் தங்கி இருப்பதாக மன்னார் பொலிஸாருக்கு இரகசியத் தகவல்கள் ஒன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து விசேட அதிரடிப்படையினர்,கடற்படை,இராணுவம் மற்றும் பொலிஸார் ஆகியோர் இணைந்து குறித்த விடுதியினை சுற்றிவளைத்து அதிரடியான முறையில் குறித்த 6 கொள்ளையர்களையும் கைது செய்துள்ளனர்.

குறித்த 06 பேரும் ஒரு தொகைப் பணத்துடன் இந்தியாவிற்கு தப்பிச் செல்லுவதற்காக மன்னார் வந்து தங்கியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சந்தேக நபர்கள் அறுவரும் புலனாய்வு அதிகாரிகளினால் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்

# இன்டர்போல் பொலிஸாரினால் தேடப்படுபவரென கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர் விடுதலை

(கொழும்பு)

இன்டர்போல் பொலிஸ் எச்சரிக்கைப் பட்டியலில் உள்ளவர் என சந்தேகிக்கப்பட்டு இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழரை விடுதலை செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கொழும்பைச் சேர்ந்த 52 வயதுடைய கன்யூட் ஸ்ரீபாலன் பரிஸ் இம்மாதம் 26 ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

சர்வதேச அளவில் தேடப்படுகிறவர்கள் பட்டியலிலும் இன்டர்போல் பொலிஸ எச்சரிக்கை பட்டியலிலும் இருப்பதாக இவர மீது குற்றம்சாட்டப்பட்டது.

இதுதொடர்பில் கன்யூட் ஸ்ரீபாலன் பீரிஸின் மனைவி லூர்து பெனில்டா பீரிஸ் சென்னை உயர் நீதிமன்றத்தில் ஆள் கொணர்வு மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுவில் அவர் கூறியுள்ளதாவது-

எனது கணவர் பீரிஸ் இம்மாதம் 26 ஆம் திகதி இலங்கை செல்வதற்காக சென்னை விமான நிலையத்தில் காத்திருந்தார். அப்போது அவரைக் குடியுரிமை அதிகாரிகள் கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, புழல் சிறையில் அடைத்தனர்.

சர்வதேச அளவில் தேடப்படுகிறவர்கள் பட்டியலிலும் இன்டர்போல் பொலிஸ எச்சரிக்கை பட்டியலிலும் பீரிஸின் பெயர் இருப்பதாகக் கூறி எனது கணவரைக் குடியுரிமை அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்தக் கைது நடவடிக்கை சட்டவிரோதமானதாகும். எனவே அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, விடுதலை செய்ய உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்த மனு மீது நீதிபதிகள் சி.நாகப்பன், எம்.சத்தியநாராயணன் ஆகியோர் முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணை நடைபெற்றது.

மனுதாரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பீரிஸுக்கு எதிராக இந்தியாவில் நீதிமன்றப் பிடியாணை எதுவும் இல்லாத நிலையில் அவரைக் கைது செய்தது சட்டவிரோதம் என்று வாதிட்டார்.

மத்திய அரசு சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரவீந்திரன், பீரிஸைக் கைது செய்ய வேண்டும் என்றோ, அவரை இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டும் என்றோ, இந்திய வெளியுறவு அமைச்சகத்துக்கு எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்று தெரிவித்தார்.

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், பீரிஸை குடியுரிமை அதிகாரிகள் கைது செய்தது சரியான நடவடிக்கை அல்ல. எனவே அவரை விடுதலை செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

# கூட்டுறவு சங்கங்களின் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வலிகாமம் கொத்தணியின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், நெறியாளர் குழுத் தெரிவும் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

வலிகாமம் கொத்தணியின் கலையரங்கு மண்டபத்தில் தலைவர் க.மெய்யழகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், சமாசத் தலைவர் த.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இறுதிக்கட்ட கண்ணிவெடியகற்றல் வடக்கில் இடம்பெற்று வருகின்றது

## இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)



வடக்கில் இறுதிக் கட்ட கண்ணி வெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருவதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரையில் 3 இலட்சத்து 58ஆயிரத்து 588 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இன்னும் 300 தொடக்கம், 400 சதுர கிலோமீற்றர் பரப்பில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் மீதமிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல, வெளிநாட்டு இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணம், பொலனறுவை மற்றும் மன்னார் மாவட்டங்களின் 96 சதவீதமான நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

# தடைசெய்த உபகரணங்கள் மூலம் மீன்பிடிப்பதைத் தடுக்க விசேடதிட்டம்

(கொழும்பு)

தடை செய்யப்பட்ட உபகரணங்கள் மூலம் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

இதன் முதற்கட்டமாக மீனவர்களை தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய கூறினார்.

மேலும் சம்பிரதாய ரீதியிலான மீன்பிடி முறைகளுக்கு சட்டவிரோதமான மீன்பிடி முறைகள் மூலம் பாதிப்பு ஏற்படுவதாக பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

எவ்வாராயினும் சம்பிரதாய மீன்பிடி முறைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்கான புதிய திட்டத்தை கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்கமைய நடைமுறைப்படுத்துவதாகவும் ரியர் அட்மிரல் தயா தர்மப்பிரிய மேலும் தெரிவித்துள்ளார்.

# கல்வித்துறைக்கான சகல வசதிகளையும் இலவசமாக வழங்கிவரும் நாடு இலங்கை

## அமைச்சர் பந்துல குணவர்த்தன பெருமை



(கொழும்பு)

அழகியற் கலைத்துறைக்கு மூவாயிரத்துக்கு மேற்பட்டபட்டதாரி ஆசிரியர்களை ஒரேதடவையில் நியமிக்கின்றமை இலங்கையின் கல்வி வரலாற்றில் இதுவே முதற்தடவையாகுமென கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்நியமனங்களை வழங்கக்கோரி அநாவசிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் அதன்மூலம் சுமார் 700 நியமனங்களையே பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். எனினும் ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை இத்துறைக்கு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட நியமனங்களை வழங்கி பெருமைப்படுத்தியுள்ளது எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அழகியற்கலைப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் வைபவம் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர்-

அழகியற் கலைப் பிரிவுக்கு மூவாயிரத்துக்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பில் நான் அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்த போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எந்தவித தயக்கமுமின்றி அதற்கு அங்கீகாரமளித்தார். அதற்காக நாம் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த 3 வருடகால யுத்தத்தின் சத்தம் எமது கலாசாரத்தின் ஒரு பகுதியாகியிருந்தமை குறிப்பிடப்பட வேண்டியது. அத்தகைய நிலையிலும் அரசாங்கம் கல்வித்துறையில் மிகுந்த கவனம் செலுத்தியது.

இலவசக் கல்வி, இலவசப் பாடநூல், இலவசச் சீருடை என இலவசமாக சகலதையும் வழங்கும் ஒரே நாடு இலங்கை மட்டுமே. பட்டதாரிகள், கற்றோரைக் கணக்கில் எடுக்காத காலம் ஒன்றிருந்தது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு உரிய கௌரவமளிப்பவர்.

இயந்திர உபகரணங்களையன்றி நாட்டின் சொத்துக்களான எதிர்கால சந்ததியைப் பொறுப்பேற்கும் புதிய ஆசிரியர்கள் கௌரவமான நல்லொழுக்கமுள்ள பிரஜைகளாக உருவாக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# பிதிர்க்கடனை நிறைவேற்ற புண்ணியமான தினம் ஆடி அமாவாசை



இந்துக்களால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற வழிபாடுகளில் ஆடி அமாவாசை முக்கியமானதோர் இடத்தை வகிக்கிறது. ஆடி மாதத்தில் வருகின்ற அமாவாசைத் திதி பிதிர் வழிபாட்டிற்கும் புண்ணியமான தினம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன.

ஆடி அமாவாசை தினத்தில் கடல், நதி, வாவி போன்ற தீர்த்தங்களில் நீராடினால் பல வினைகள் அறும் என்றும், பாவங்கள் நீங்கும் என்றும் கூறுவர். தீர்த்தங்கள் இறைவனின் அருள் சொரிந்த நீராக நினைந்து முன்னோர்களின் பிதுர்களை எண்ணி அவர்களின் பாவங்களைப் போக்கி அவர்களுக்கு முக்தியளிக்கும்படி இறைவனை வேண்டித் தீர்த்தமாடுதல் வேண்டும்.

ஆடி அமாவாசையில் தீர்த்தமாடுதல், பிதுர் வழிபாடு செய்தல், தர்ப்பணம், பிண்டதானம் நிறைவேற்றுதல் என்பவை ஆண்டு தோறும் கீரிமலை நகுலேஸ்வரத்திலும், மட்டக்களப்பு அமிர்தகழி, மாமாங்கேஸ்வரத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்வாறு வேறும் பல சிவத்தலங்களிலும் இந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.

ஆடி அமாவாசையில் இறந்த பெற்றோர்களுக்குச் செய்யும் தர்ப்பணம், சிராத்தம் மூலம் காணிக்கையை, அன்பை அவர்களுக்குச் செலுத்துகின்றோம். அவர்களின் ஆசீர்வாதங்களும், பாதுகாப்பும் நமது நல்வாழ்வுக்குத் தேவை. எமது சமயத்தின் விதிமுறைப்படி தெய்வத்தை நேராக வழிபட்டு அனுக்கிரகம் பெறும் நிலை மிக உயர்ந்த நிலையில் பக்குவமடைந்த சந்நியாசிகள் போன்றோருக்கே உரித்தானது. ஏனையோர் தேவதைகளைப் பிரிது செய்து தெய்வங்களின் அனுக்கிரமகம் பெற்று நன்மையடைகின்றார்கள்.


தேவதைகளைப் பிரிது செய்து யாகங்கள், வேள்விகள், ஹோமங்கள் மூலம் ஆகும். இவ்வாறே பிதுர்களைப் பிரிதி செய்ய சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பவை செய்யப்படுகின்றன. இவற்றின் மூலமே நாம் நன்மையடைய வேண்டும். எனவே அமாவாசை, பௌர்ணமி விரதங்கள் மற்றும் சிரார்த்தம் முதலியவற்றைத் தவறாது அனுஷ்டித்து வரவேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன. இவ்வாறு இவற்றை அனுஷ்டிக்காதவர்களுக்கு பிதுர்சாபம் ஏற்படுகிறது என்றும் பிதுர் சாபம் வாழ்வின் இன்னல்களையும், தொல்லைகளையும் தருகின்றன என்று சான்றோர்கள் கூறியுள்ளனர்.

சித்திரை மாதத்தில் வரும் பௌர்ணமியும், ஆடி, தை மாதங்களில் வருகின்ற அமாவாசையும் சிறப்புப் பொருந்தியன என்று சைவ நூல்கள் கூறுகின்றன. அவரவர் தம் தந்தை, தாயார் இறந்த திதிகளை தவறவிட்டவர்கள் ஆடி அமாவாசை தினத்தில் தந்தையை நோக்கியும், சித்திரைப் பௌர்ணமி தினத்தில் தாயின் பொருட்டும் சிரார்த்தம், தர்ப்பணம், பிண்டதானம் என்பவற்றைச் செய்தல் சிறந்ததாகும்.

மதுரகவி, காரை எம்.பி, அருளானந்தன்

# கூட்டமைப்புடனான அடுத்த சுற்றுப் பேச்சை அடுத்தே நாடாளுமன்றத் தெரிவுக்குழுப் பிரேரணை சமர்ப்பிப்பு

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன கூறுகிறார்



(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் பின்னரே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இடம்பெறும் பேச்சுவார்த்தையின்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் அந்தக் கட்சி முன்வைக்கும் யோசனை குறித்து ஆழமான முறையில் கவனத்திற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தயாரிப்பதற்கான நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தற்போதைய நிலைமை குறித்து விபரிக்கையிலேயே ஆளும் கட்சியின் பிரதம கொறடா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இவ்விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைப்பதற்கான யோசனை தயாரிக்கப்பட்டுள்ளதே தவிர இதுவரை அடுத்தகட்ட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் இடையிலான அடுத்த சுற்று பேச்சுவார்த்தை அடுத்தவாரம் நடைபெறவுள்ள நிலையில், அந்த பேச்சுவார்த்தையின் முடிவிலேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரேரணையை சபையில் சமர்ப்பிப்பது குறித்து தீர்மானிக்கப்படும்.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தையின்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் குறித்து ஆராயப்படும். அதன்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்வைக்கவுள்ள யோசனைகள் குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராயும்.

அதனையடுத்து தமிழ்க் கூட்டமைப்பின் யோசனைகளையும் கவனத்திற்கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவே எதிர்பார்க்கின்றோம்.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான சந்திப்பின் பின்னர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

இதேவேளை நாடாளுமன்ற தெரிவுக் குழு தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுக்கின்ற தீர்மானத்திலேயே தமது கட்சியின் தீர்மானம் தங்கியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளதாக தெரியவருகின்றது. இந்நிலையிலேயே தெரிவுக்குழு தொடர்பில் தமிழ்க் கூட்டமைப்பின் யோசனைகள் பெரிதும் முக்கியத்துவம் பெறுகின்றன.

பாதுகாப்பற்ற ரயில் கடவை

## இலத்திரனியல் சமிக்ஞைகள்

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு இலத்திரனியல் மணிகளையும் சமிக்ஞைகளையும் பொருத்துவதற்காக ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது

இந்த நடவடிக்கைக்காக 900 மில்லியன் ரூபாவை சர்வதேச விலை மனுக்கோரல் நடைமுறைக்கு அமையவும், 100 மில்லியன் ரூபாவை உள்நாட்டு விண்ணப்பதாரிகளுக்கான விலை மனுக் கோரல மூலமும் பெற்றுக்கொடுக்க நட வடிக்கை எடுத்துள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் பி.ஏ.பீ.ஆரிய ரத்ன தெரிவித்தார்.

இந்த வேலைத் திட்டத்தினை இந்த வருட இறுதிக்குள் செயற்படுத்த உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் செயற்திட்டம் காரணமாக ரயில்வே கடவைகளில் இடம்பெறும் விபத்துக்களைக் குறைத்துக்கொள்ள முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் 630 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் இருப்பது தெரியவந்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவிக்கிறது.

## இவ்வருட இறுதிக்குள் பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படும்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளிலும் பாதுகாப்புக் குழுக்களை அமைக்கவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

மாணவர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வினை வழங்கும் வகையிலும், பாடசாலைகளுக்குள் இடம்பெறுகின்ற துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அதிகார சபையின் தலைவர் நந்தா இந்ரவங்ச குறிப்பிட்டார்.

இந்நிலையில் சுமார் ஒன்பது ஆயிரத்து எழுநூறு பாடசாலைகளில் இத்தகைய குழுக்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதற்கான சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேவையற்ற உயிரிழப்பைத் தவிர்க்க தேசிய கொள்கை தயாரிக்கும் திட்டம்

(கொழும்பு)

காயமடைதல் மற்றும் அதனைத் தடுப்பதற்கான முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையும் அதற்கான செயற்றிறன் மிக்க திட்டத்தையும் தயாரிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்தள்ளது

காயமடைதலை தடுத்தல், காயங்களால் ஏற்படும் மரணங்களைத் தடுத்தல் ஆகிய நோக்கங்களுக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

வேண்டுமென்றே காயப்படுத்தல் மற்றும் தெரியாமல் காயம் ஏற்படுதல் போன்ற சம்பவங்கள் பதிவாகின்றதுடன் அவ்வாறான நிலைமைகள் இந்தத் திட்டத்தின் மூலம் முகாமைத்துவம் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வருடத்திற்கு முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும், அவற்றின் மூலம் இரண்டாயிரம் பேர் உயிரிழப்பதாகவும் இதனைக் குறைக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

இதன் பொருட்டு மக்களின் கருத்துகளையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும சுட்டிக்காட்டுகிறது.

## மரபுரிமை இடங்கள் அழிவடைவதை தடுப்பதற்கு கிராம மட்டக் குழுக்கள்

(கொழும்பு)

மரபுரிமை மிக்க இடங்கள் அழிவடைவதைத் தடுப்பதற்கான குழுக்களை கிராம மட்டத்தில் நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தொல்பொருள் ஆய்வுத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்தக் குழுக்கள் அடுத்த மாதம் முதல் நியமிக்கப்படவுள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் கலாநிதி செனரத் திசாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை கிராம மட்டத்தில் மரபுரிமை மிக்க இடங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலான சம்பவங்கள் இடம்பெறும் போது அவற்றைப் பதிவு செய்வதற்கும், அது பற்றிய தகவல்களை தொல்பொருள் ஆய்வு திணைக்களத்திற்கு வழங்கும் வகையிலும் இந்த குழுக்கள் செயற்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும் நாட்டிலுள்ள மரபுரிமை மிக்க இடங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் பொதுமக்களும் இணைந்துக்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், அத்தகைய இடங்கள் அழிவுக்குள்ளாகும் சம்பவங்கள் இடம் பெறுவதனை தடுக்கும் வகையில் பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்குமாறு பாதுகாப்புச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக கலாநிதி செனரத் திசாநாயக்க குறிப்பிட்டார்.

இத்தகைய மரபுரிமை மிக்க இடங்களில் அதிகமாக அச்சுறுத்தல் காணப்படுகின்ற பிரதேசங்களுக்கு கூடுதல் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, இந்த நடவடிக்கையில் பொலிஸாருடன் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களமும் இணைந்து செயற்படுவதற்கான அனுமதியை பெற்றுத் தருமாறு பாதுகாப்பு அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

## நெல் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

சிறுபோக நெல் அறுவடையின் போது 75 ஆயிரம் மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்வதற்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு உள்நாட்டு வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இம்முறை சிறுபோகத்தின் போது ஒன்று தசம் ஏழு மில்லியன் மெட்டரிக் தொன் நெல் அறுவடை பெறப்படும் என எண்ணியுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார்.

இவற்றுள் நூற்றுக்கு பத்து வீதமானதை அமைச்சு கொள்வனவு செய்ய முடியுமெனவும், அவற்றை களஞ்சியப்படுத்துவதற்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்முறை பொலனறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து விளைச்சலை எதிர்பார்ப்பதாகவும் அதனை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மனித உரிமை ஆணைக் குழுவினால் தட்சணா மருதமடுவில் நடமாடும் சேவை




(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் மீள்குடியேறியுள்ள மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தட்சணா மருதமடுக் கிராமத்தில் உள்ள பொதுநோக்கு மண்டபத்தில் நடமாடும் சேவை நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதன் போது காலம் கடந்த பிறப்பு மற்றும் இறப்பு, காலம் கடந்த திருமண பதிவுகளை மேற்கொள்ளுதல், காணி தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணல, வயோதிபர் மற்றும் மாற்றாற்றல் கொணடவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்குதல், பொலிஸ் முறைப்பாட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளுதல், தொலைந்த ஆவணங்களுக்கு விண்ணப்பித்தல், அடிப்படை மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்தல் போன்ற சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்படி நடமாடும் சேவைக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஜெயந்த பிரசன்ன அமரசிங்க மற்றும் சட்ட ஆலோசகர் திருமதி மிகுதினி திறிஸகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் சேவையின் போது தட்சணா மருதமடுக் கிராமத்தில் மீள்குடியேறியுள்ள சுமார் 200 குடும்பங்கள் வரை நன்மை அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# கின்னஸ் சாதனையில் இதுவும்

அதிக உயரம் தாண்டுதலுக்கான கின்னஸ் உலக சாதனையை இந்த நபர் பெற்றுள்ளார். தண்ணீரில் அதிக அளவு உயரம் தாண்டி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். உலகிலேயே அதிகளவு உயரம் சென்ற நபர் என்ற சாதனையை தற்போது இந்த நபர் பெற்றுள்ளார்.

# குப்பைகளால் நிரம்பும் தொடர்மாடிகள்

குப்பைச்சாக்குகளால் கெய்ரோவின் சேரிப்புறத்தில் உள்ள தொடர்மாடிக் கட்டடம் ஒன்று நிரம்பி வழிகின்றமையைக் காண்கிறீர்கள். ஆயிரக்கணக்கான எகிப்தியர்கள் குப்பைகளை மறுசுழற்சி செய்து விற்பனை செய்யும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் படத்தை எடுத்த புகைப்படப் பிடிப்பாளரான Ilya Stepanov கருத்துத் தெரிவிக்கையில், அவர்கள் பல நூற்றாண்டுகளாக இந்தத்தொழிலைச் சாதாரணமாகச் செய்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.



# பெறுமதிமிக்க வைன்

உலகின் மிகவும் பெறுமதியான வைன் எனற பெருமையைப்பெற்றுள்ளது இந்த வெள்ளை வைன்... பழைய காலத்து மதுக்கம்பனி ஒன்றின் மூலமே இந்த வைன் வெளிச்சத்துக்கு வந்துள்ளது... இதன் பெறுமதி 75,000 ஸ்ரேலிங் பவுண்களாகும்...



©PA


பழைய கால வைன் சேகரிப்பாளரான Christian Vanneque என்பவர் Antique Wine என்ற நிறுவனத்திடமிருந்தே குறித்த மதுப்போத்தலை வாங்கியுள்ளார். இந்த அரிய வகை வைன் ஆனது கின்னஸ் புத்தகத்திலும் இடம் பிடித்து விட்டது... வரலாற்றுப்புகழ் மிக்க வைன் போத்தலிலிருந்து ஒரு துளியளவும் கசிய விடாமல் காப்பது அந்த வைனின் புதிய முதலாளியின் கடமையாகும்...

# 92 வயதுப் பாட்டிக்கு பிறந்த 60 வயது குழந்தை

92 வயது மூதாட்டி ஒருவர் 60 வயதுக் குழந்தை ஒன்றை சீனாவில் சில நாட்களுக்கு முன் பிரசவித்து உள்ளார். என்ன அதிசயமாக இருக்கின்றதா? மூதாட்டியின் பெயர் Huang Yijun. சீனாவின் தென்பகுதியைச்சேர்ந்தவர். குழந்தை இறந்துதான் பிறந்து இருக்கின்றது. இவர் உண்மையில் ஒரு கல் குழந்தையைத் தான் கடந்த 50 வருடங்களுக்கும் மேலாக சுமந்து வந்திருக்கின்றார். வயிற்றில் உருவான சிசு 1947 ஆம் ஆணடு இறந்து இருககின்றது. இறநத சிசுவை வெளியில் எடுகக வேண்டும் என்று வைத்தியர்கள் அந்நாட்களில் சொல்லி இருக்கின்றனர். ஆனால் வறுமை காரணமாக இவர் பேசாமல் இருந்து விட்டார். இறந்த சிசு வயிற்றுக்குள் கல்லைப்போல் ஆகி விட்டது. இது மிகவும் அரிதாக ஏற்படக் கூடிய நோய். முட்டை கருப்பைக்குள் வெளியில் தங்கி விடுகின்ற அதே சமயம் மகப் பேறு தோல்வி அடைகின்றபோது இந்நோய் ஏற்பட்டு விடுகின்றது.







# மிக நீளமான மோட்டார் சைக்கிள்

பிரிட்டனைச்சேர்ந்த தண்ணீர்க் குழாய் பொருத்துனர் ஒருவர் உலகிலேயே மிக நீளமான மோட்டார் சைக்கிளை உருவாக்கி சாதனை படைத்துள்ளார். 22 மீற்றர் (72 அடி) நீளமான இம் மோட்டார் சைக்கிளில் 25 பேர் அமர்ந்து செல்வதற்கான இருக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன. கொலின் பூர்ஸ் எனும் 31 வயதான நபருக்கு இம் மோட்டார் சைக்கிளை உருவாக்குவதற்கு ஒரு மாதமே தேவைப்பட்டுள்ளது. அவர் ஒன்றரை, 125 சீசீ மொபெட்ஸ்களை இதற்குப்பயன் படுத்தியுள்ளார். அலுமினிய சட்டத்தை பயன்படுத்தி மோட்டார் சைக்கிளின் நீளத்தை



அவர் அதிகரித்துள்ளார்.

அண்மையில் அவர் கிரந்தாம் பிராந்தியத்திலுள்ள விமான ஓடுபாதை யொன்றில் ஒரு மைல் தூரம் இந்த மோட்டார் சைக்கிளில் சவாரி செய்தார். இந்த மோட்டார் சைக்கிளின் பெறுமதி சுமார் 3,000 ஸரேலிங் பவுண்களாகும். மணித்தியாலத்திற்கு 35 மைல்கள் வேகத்தில் இது பயணம் செய்யக்கூடியது. முதலில் இந்த வாகனம் முறையாக இயங்காது எனவும் மிகவும் மெதுவாகவே பயணிக்கும் என்றே நினைத்தேன். ஆனால் ஒரு தடவை இதில் பயணம் செய்தால் மிகவும் அது இலகுவாகி விடும். ஆனால் அதிக பாரமான ஸ்ரீயரிங் காரணமாக கைகளுக்குத்தான் அதிக பளு ஏற்படும் என கொலின் பூர்ஸ் தெரிவித்தார்.

அவர் தற்போது கின்னஸ் சாதனை பதிவுகளுக்காக அந்த மோட்டார் சைக்கிளை செலுத்தும் காட்சி அடங்கிய வீடியோவையும் நேரில் கண்டவர்களின் சாட்சியங்களையும் கின்னஸ் உலக சாதனை புத்தக பதிப்பாளர்களுக்கு அனுப்பவுள்ளதாக தெரிவித்துள்ளார். கொலின் ஏலவே வேகமாக இயங்கக்கூடிய அங்கவீனவர்கள் நடமாடுவதற்கான மோட்டார் இயந்திரத்தை (மொபிலிட்டி ஸ்கூட்டர்) உருவாக்கி சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அது மணித்தியாலத்திற்கு 71 மைல் வேகத்தில் இயங்கக்கூடியதாகும்.

# வலைப்பக்கத்தினை பி.டி.எப் போர்மட்டில் சேமிப்பதற்கு

வலைப்பக்கங்கள் பொதுவாக HTML போர்மட்டில் மட்டுமே இருக்கும். இதனை நாம் பி.டி.எப் மற்றும் இமேஜ் போர்மட்களில் சேமித்து வைத்துக்கொள்ள முடியும். இதனை நாம் நெருப்புநரி மற்றும் குரோம் உலவிகளில் செய்ய முடியும். பி.டி.எப் மற்றும் இமேஜ் கோப்புகளாக மாற்றுவதால் நாம் இதனை உலவிகளின் துணை இல்லாமலே காண முடியும்.

இந்த நீட்சியில் மூலம் நாம் வலைப்பக்கத்தில் உள்ள எழுத்து, படம் போன்றவற்றை இணைத்தோ இல்லையெனில் வெறும் எழுத்துக்களை மட்டுமோ தனியாக சேமித்துக் கொள்ள முடியும். இந்த நீட்சிகளை குறிப்பிட்ட உலவிகளில் நிறுவிக்கொள்ளவும். பின் உலவிகளை மறுதொடக்கம் செய்து கொள்ளவும். தற்போது நீட்சிக்கான சுட்டி உங்கள் உலவியில் இணைக்கப்பட்டிருக்கும்.

அதை பயன்படுத்தி எந்த வலைப்பக்கத்திற்கு சென்றாலும் அந்த வலைப் பக்கத்தினை பி.டி.எப் மற்றும் இமேஜ் போர்மட்களில் சேமித்து வைத்துக்கொள்ள முடியும். இந்த நீட்சியின் மூலம் நாம் இமேஜ் கோப்புக்களை JPEG, PNG, GIF, BMP மற்றும் பல்வேறு போரமட்களில் சேமித்துக்கொள்ள முடியும். பிடிஎப் கோப்புக்களை A4, A3, Legal, B10 மற்றும் பல்வேறு போர்மட்களில் சேமித்துக்கொள்ள முடியும்.

நெருப்புநரி உலவியில் நீட்சிக்கான ஐகான் தெரியவில்லையெனில்

Ctrl + / கீகளை ஒருசேர அழுத்துவதன் மூலம் காணமுடியும்.

இல்லையெனில் View -, Toolbars -, Add-on Bar வழியாகவும் இந்த நீட்க்காண ஐகானை காண முடியும்.

நெருப்புநரிக்கான நீட்சி:- https://addons.mozilla.org/en-US/firefox/addon/iweb2x/

குரோம் நீட்சி:-

https://chrome.google.com/webstore/detail/mhabjpofjblpelkgmllkpcnlhgjpebko

# விளம்பரங்களை தடைசெய்ய

சமூக இணையத்தளமான பேஸ்புக்கில் வலது பக்கம் தெரியும் விளம்பரங்கள் பல நேரங்களில் நமக்கு சலிப்பை ஏற்படுத்தும். இந்தப்பிரச்சினையை நீக்கி பேஸ்புக் விளம்பரங்கள் இல்லாமல் பார்ப்பதற்கு ஒரு வழி உள்ளது. சமூக வலைத்தளங்களில் தன்க்கென்று தனி இடத்துடன் வலம் வரும் பேஸ்புக் இணையதளத்தின் வலது பக்கம் இருக்கும் விளம்பரங்களை எளிதாக நீக்கலாம்.

நமக்கு உதவ ஒரு நீட்சி உள்ளது. குரோம் உலாவியில் குறிப்பிட்டிருக்கும் பக்கத்திற்கு சென்று Install என்ற பொத்தானை சொடுக்கி குரோம் உலாவியில் எளிதாக நிறுவலாம். இனி நாம் பேஸ்புக் இணையதளத்தை திறந்தால் வலது பக்கம் எந்த விளம்பரமும் நமக்கு தெரிவதில்லை. பேஸ்புக்கில் சில சமயங்களில் தேவையில்லாத விளம்பரங்கள் வந்து நம் கவனத்தை திருப்பும்.

ஆனால் இனி எந்த விளம்பர தொந்தரவும் இல்லாமல் பேஸ்புக் இணையத் தளத்தை பயன்படுத்தலாம். முழுமையாக விளம்பரங்களை தடை செய்தால் பல நேரங்களில் சில இணையப்பக்கங்கள் தெரிவதில்லை. ஆனால் இப்போது நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கும் விளம்பரம் தடுப்பு பேஸ்புக் இணைய தளத்திற்கு மட்டுமே பொருந்தும்.

இணையதள முகவரி:-

https://chrome.google.com/webstore/detail/eommhojjeeaapcofdjleiamnokcfdnna?hl=en#

கணினி மூலை

# இந்திய நகரங்களின் பாதுகாப்பிற்கு எதிர்காலத்தில் ஆபத்து உள்ளது

(புதுடில்லி)

**"இந்திய நகரங்களின் பாதுகாப்புக்கு எதிர்காலத்தில் ஆபத்து உள்ளது" என, முன்னாள் உள்துறை செயலர் ஜீ.கே.பிள்ளை கூறியுள்ளார்.**

இதுதொடர்பாக அவர் கூறியதாவது: மும்பையில் பயங்கரவாதிகள் நடத்திய, நவம்பர் 26 தாக்குதல் வழக்கில், பாகிஸ்தான் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வழக்கு நகராமல் இருப்பது வருத்தத்திற்குரியது. காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு அருகே, இரு நாட்டு மக்களும் பயனடையும் வகையில் வர்த்தக பரிமாற்றம் நடத்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இதில், வர்த்தகப் பொருட்கள் யாருடையவை என்பது அடையாளப் படுத்தப்பட வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே அதன் பயன் மக்களை சென்றடையும். எதிர்காலத்தில் இந்திய நகரங்களின் பாதுகாப்புக்கு ஆபத்து உள்ளது. நகரங்கள் புதிய வகையிலான குற்றங்களை சந்திக்கும் நிலையில் உள்ளன. நாட்டில் வேலையின்மையை குறைத்தாலே இத்தகைய குற்றங்களை கட்டுப்படுத்த முடியும். என அவர் கூறினார்.



# இந்தியாவுடன் நல்லுறவு ஏற்பட பாகிஸ்தான் அமைச்சர் பிரார்த்தனை

(சென்னை)

இந்தியா- பாகிஸ்தான் இடையே நல்லுறவு ஏற்பட பாக்கிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இந்தியாவில் பிரார்த்தனை நடத்தியுள்ளார். பாகிஸ்தான் வெளியுறவு பெண் அமைச்சர் ஹினா ரப்பானிகர் இந்தியா-பாகிஸ்தான் இடையே நல்லுறவு ஏற்படவேண்டும் என விரும்புகிறார். இந்தியாவில் 3 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஹினா மற்றும் வெளியுறவுத் துறை செயலாளர் சல்மான் பஷிர்,மற்றும் அதிகாரிகள் தெற்கு டெல்லியில் உள்ள சுபி சன்னியாசி நிஷாமுதீன் அவுலியா தர்காவில் பிரார்த்தனை நடத்தி உள்ளனர்.

பெண்களை தர்கா உள்ளே அனுமதிப்பது இல்லை. அதனால் அவர் வெளி சுற்று சுவரில் இருந்து பிரார்த்தனை செய்தார். அவருடன் வந்தவர்கள் உள்ளே சென்று பிரார்த்தனை செய்து உள்ளனர். அந்த தர்காவில் இந்தியாவிற்கும்- பாகிஸ்தானுக்கு இடையே அமைதி நிலவ வேண்டியும், இரு நாடுகளுக்கு இடையே நல்லுறவு மேம்படவும் ஹினா பிரார்த்தனை செய்ததாக அங்குள்ள மத குரு தெரிவித்தார்.



# 11 இலங்கை மீனவர்கள் ஓரிசா கடற்பகுதியில் கைது

(புதுடில்லி)

ஓரிசா மாநிலம் பாரதீப் கடற் பகுதியில், இலங்கையை சேர்ந்த 11 மீனவர்கள் 2 இயந்திரப் படகுகளில் மீன் பிடித்துக்கொண்டு இருந்தனர். அவர்கள் இந்திய கடற் பகுதியில் மீன் பிடித்ததால், 2 படகுகளுடன் 11 மீனவர்களையும் இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்தனர்.

பின்னர் அவர்களை பாரதீப் கொண்டு வந்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இதன்பின் 11 மீனவர்களும் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

2 நாட்களுக்கு முன்பும் இதே கடற் பகுதியில் இலங்கையை சேர்ந்த 13 மீனவர்கள், 3 இயந்திரப் படகுகளுடன் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு விவகாரத்தில் பிரதமரையும்,சிதம்பரத்தையும் விசாரியுங்கள்

## தமிழக.பா.ஜ.க.தலைவர் கோரிக்கை

(சென்னை)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோரை விசாரிக்க வேண்டும் என்று தமிழக பா.ஜ.க.தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு தெரிந்து தான் எல்லா முடிவுகளும் எடுக்கப்பட்டதாகவும், தான் தனியாக எதுவும் செய்யவில்லை என்றும் பிரச்சினை வெளிவந்த நாள் முதல் ஆ.ராசா கூறி வருகிறார்.

அதற்கு இதுவரை பிரதமர் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. 2ஜி அலைக்கற்றை விவகாரம் குறித்து கருத்து தெரிவித்த தி.மு.க தலைவர் கருணாநிதி, தனி மனிதனாக ரூ. 1,76,000 கோடி கையாடல் செய்ய வாய்ப்பில்லை. ஊழல் நடந்திருந்தால் அதில் பலர் ஈடுபட்டிருக்க வாய்ப்புண்டு என்று கூறியிருந்தார்.

சிறப்பு நீதிமன்றத்தில் வாதிட்ட ஆ.ராசாவின் வழக்கறிஞர்,2ஜி அலைக்கற்றை உரிமம் வழங்கப்பட்டது ப. சிதம்பரத்துக்கு தெரிந்துதான் நடந்தது. அது பிரதமருக்கும் தெரியும். இல்லையெனில் அவர் இதனை மறுக்கட்டும் என்று கூறியுள்ளார்.

இதன் மூலம் பிரதமரும், சிதம்பரமும் இந்த ஊழலுக்கு உறுதுணையாக இருந்தது தெளிவாகிறது. எனவே, இருவர் மீதும் விசாரணை நடத்த வேண்டும் என்று பொன். ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்

# முதல்வர் பதவியிலிருந்து விலகுகிறார் எடியூரப்பா

(சென்னை)

கர்நாடக முதல்வர் பதவியில் இருந்து விலக எடியூரப்பா சம்மதம் தெரி வித்துள்ளார்.

கர்நாடகத்தில் சட்டவிரோத சுரங்க தொழில் குறித்த அறிக்கை லோக்அயுக்தா சார்பில் அரசிடம் தாக்கல் செய்யப்பட்டது. இதில் முதல்வர் எடியூரப்பா மீது நேரடியாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதற்கிடையே இந்த அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டு இருந்தது.

'இந்த நிலையில் எடியூரப்பா தனது பதவியை ராஜினாமா செய்யுமாறு கட்சி மேலிடம் கட்டளை பிறப்பித்து உள்ளதால், அமைச்சரவைக் கூட்டம் ரத்து செய்யப்பட்டது.


மேலும் முதல்வர் எடியூரப்பா தனது பதவியை விட்டு விலக சம்மதம் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க தலைவர் நிதின் கட்காரிக்கு தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பியுள்ளார் எடியூரப்பா.


# தாஜ்மஹாலின் வருமானம் கடந்த வருடம் அதிகரிப்பு

(புதுடில்லி)

ஆக்ராவில் அமைந்துள்ள, காதல் நினைவுச் சின்னமான தாஜ்மஹால், கடந்த ஆண்டில் மட்டும் ரூ. 20 கோடியை வருமானமாக ஈட்டியுள்ளது. இந்த வருமானம் முந்தைய ஆண்டைவிட 15 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த 2008-09ம் ஆண்டில் நுழைவுச் சீட்டு மூலம், ரூ. 14.36 கோடியும், 2009-10ம் ஆண்டில், ரூ.17.24 கோடியும், 2010-11ம் ஆண்டில் ரூ.19.89 கோடியும் வருவாய் கிடைத்துள்ளது. நினைவுச் சின்னங்கள் மூலம், இந்திய தொல்பொருள் துறைக்கு, கடந்த 2010-11ம் ஆண்டில் ரூ. 87 கோடி வருவாய் கிடைத்துள்ளது




# தனக்கு ஞாபக மறதி நோய் இல்லை என்கிறார் கல்மாடி



(புதுடில்லி)

தனக்கு ஞாபக மறதிநோய் இல்லையென சுரேஷ் கல்மாடி தெரிவித்துள்ளார். டில்லியில் நடைபெற்ற கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஏற்பாடுகளில் பல கோடிக்கு ஊழல் நடந்ததாக புகார் கூறப்பட்டது.

இதைத் தொடர்ந்து போட்டி ஒருங்கிணைப்பு கமிட்டி தலைவர் சுரேஷ் கல்மாடி மற்றும் அதன் நிர்வாகிகளில் பலர் கைது செய்யப்பட்டு திகார் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் மீது சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது.

இந்த நிலையில் சிறையில் இருக்கும் 67வயதான கல்மாடிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதற்காக அவரது தலைப்பகுதியில், கடந்த ஜூலை 19ஆம் திகதி லோக் நாராயண் ஜெய்பிரகாஷ் வைத்தியசாலையில் ஸ்கேன் எடுத்து பார்க்கப் பட்டது.

அப்போது அவரது மூளையின் இடது பக்கம் சற்று பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், இது ஞாபக மறதி நோயை ஏற்படுத்தும் என்றும் தகவல்கள் வெளியானது.

திகார் ஜெயிலில் இருந்து கல்மாடி நேற்று டெல்லியில் உள்ள அகில இந்திய விஞ்ஞான மருத்துவ ஆராய்ச்சி கழக வைத்தியசாலைக்கு வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு நரம்பியல் துறை டாக்டர்கள் பல்வேறு பரிசோதனைகளை நடத்தினார்கள்.

4மணி நேரம் அவர் வைத்தியசாலையில் பத்திரியில் இருந்தார். அப் போது அவரை சில நிருபர்கள் சந்தித்து, அவரது உடல் நிலை எப்படி உள்ளது? என்று கேட்டனர். இதற்கு பதில் அளித்த கல்மாடி,

நான் மிகவும் நன்றாக இருக்கிறேன். எனக்கு ஞாபக மறதி நோய் இருப்பதாக கூறுவது சரியல்ல. எனக்கு நல்ல நினைவு இருக்கிறது. மூளை நன்றாக வேலை செய்கிறது.

5ஆண்டுகளுக்கு முன் எனக்கு இருதயத்தில் பழுதாகி இருந்த ஒரு வால்வு ஆப்ரேஷன் மூலம் சரி செய்யப் பட்டது. அதன் பின் பல இருதய பரிசோ தனைகளை டாக்டர்கள் எனக்கு அளித்து வருகிறார்கள். மற்றப் படி நான் நன்றாக இருக்கிறேன்.

என் உடல்நிலை பற்றி ஜெயிலுக்கு வெளியே பரவி இருக்கும் தகவல்கள் உண்மை அல்ல. எனது உடலில் உள்ள கோளாறுகளுக்காக, சில பரிசோதனைகளை செய்து கொள்ளவே வைத்தியசாலைக்கு வந்து இருக்கிறேன் என்று கூறினார்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

பெயர்: சி.அபிசனா
முகவரி: டச்சுவீதி சித்தன்கேணி
யாழ்.



30.07.2011



பெயர்: ச.யதுஷ்
முகவரி: கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................
முகவரி : ..................................
பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .................................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# கடாபியின் படையினருக்கு ஆதரவான லிபிய புரட்சிப் படைத்தளபதி படுகொலை

(திரிபோலி)

லிபிய புரட்சிப் படையின் தளபதி அப்டெல் பட்டாஹ் யூனெஸ் நேற்றுமுன்தினம் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனை தேசிய புரட்சிப்படை சபை உறுதிப்படுத்தியுள்ளது. தாக்குதல் நடத்திய குழுத் தலைவரை தாம் கைது செய்துள்ளதாக புரட்சிப் படையின் பேச்சாளர் முஸ்தபா ஜாலில் தெரிவித்துள்ள போதும, தாக்குதல் நடத்தியவர்கள் கடாபியின் படையினரா என்பதை அவர் தெளிவாகக் கூறவில்லை.

ஜெனரல் பட்டாஹ் யூனெஸ், கடாபி படையினருக்கு ஆதரவாக செயற்பட்டார் எனும் சந்தேகமும் சமீபகாலமாக நிலவியுள்ளது.

அவரும் உதவியாளர் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக முன்னர் கூறப்பட்டது. ஒரு சில மணி நேரத்தில் அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் எனத் தகவல் மாறியுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட ஜெனரல் யூனிஸ் 1969 ஆம் ஆண்டு கடாபி ஆட்சியை கைப்பற்ற காரணமாகவிருந்தவர் என்பதுடன், லிபியாவின் முன்னாள் உள துறை அமைச்சராகவும் இருந்து வந்துள்ளார். கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து கடாபிக்கு எதிரான பாதையில் திசை திரும்பியதுடன், புரட்சிப்படைக்குத் தலைமை வகிக்க தொடங்கினார்.



ஐந்து மாதங்களுக்கு மேலாக கடாபி படையினருடன் மோதிவரும் புரட்சிப்படையினர், லிபியாவின் கிழக்கு பகுதிகளான பெங்காஸி, மிஸ்ராட்டா நகரின் மேற்குத் துறைமுகப் பகுதி என்பவற்றை கைப்பற்றியுள்ள போதும், தலைநகர் திரிபோலி உட்பட பெரும்பாலான மேற்குப் பகுதிகளை கடாபியின் அரச படைகள் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளன.

# அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் நெருக்குதலால் அணு ஆயுதத் தயாரிப்பை கைவிட்ட பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

கடந்த 1970களில் பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது அதைத் தடுக்கும் முயற்சியில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஈடுபட்டன எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆவண காப்பகத்திலிருந்து சில முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக கடந்த 1970 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது அதைத் தடுப்பதற்கு அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகள் குறித்த தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 1978 - 81 வரையிலான காலகட்டத்தில் அணு ஆயுதம் தயாரிப்பதற்கான முயற்சியில் பாகிஸ்தான் ஈடுபட்டு இருந்தது.

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள சாஸ்மா என்ற இடத்தில் அணு உலை அமைக்கும் நடவடிக்கைகளில் பாகிஸ்தான் ஈடுபட்டது. இதற்கு தேவையான செறிவூட்டப்பட்ட யூரேனியம் மற்றும் தொழில் நுட்ப உதவிகளை அணுசக்தி அளிக்கும் நாடுகளிடமிருந்து பெறுவதற்கு பாகிஸ்தான் முயற்சித்தது.

இதுகுறித்து தகவல் அறிந்த அமெரிக்காவும், பிரிட்டனும் இந்த முயற்சிக்கு முட்டுக்கட்டை போடடன. அணு சக்தி தொடர்பான வசதிகளை அளிக்கும் நாடுகளுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும், உத்தரவுகளை பிறப்பித்தன.

பாகிஸ்தானுக்கு அணு சக்தி தொடர்பான உதவிகளை அளிக்கக்கூடாது எனற உத்தரவும் அதில் முக்கியமானது. இதையடுத்து சாஸ்மாவில் அணு உலை அமைப்பதற்கான உதவிகளைச் செய்ய முனவந்த பிரான்ஸ் அரசு தனது திட்டத்தைக் கைவிட்டது எனத தெரிவிக்கப்பட்டுள்ளது.



தெஹ்ரானில் ஈராக்கிய பெற்றோலியத்துறை அமைச்சர் அப்துல் கரீமை, ஈரான் ஜனாதிபதி முகமது அஹமத் நிஜாத் (வலது) மற்றும் ஈரான் பெற்றோலியத் துறை அமைச்சர் அலியாபாடி இருவரும் சந்தித்துப் பேச வந்த போது...

# ஆபிரிக்க நாடுகளில் கடும் வரட்சி தினமும் 250 குழந்தைகள் பலி

ஆபிரிக்க நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக தினமும் 250 குழந்தைகள் பட்டினியால் இறக்கின்றன என தெரியவந்துள்ளது.

சோமாலியாவில் பல ஆண்டுகளாக பட்டினி, பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. ஐ.நா சபை தெற்கு சோமாலியா பகுதியை "பஞ்சத்துககு இலக்கான பகுதி" என அறிவித்துள்ளது.

இப்பகுதியில் ஒவ்வொரு ஆறு நிமிடத்துக்கும் ஒரு குழந்தை பலியாகி வருகிறது. சோமாலியா மட்டுமல்லாமல் எத்தியோப்பியா, கென்யா ஆகிய ஆபிரிக்க நாடுகளில் உள்ள மக்கள் நீண்ட காலமாக வறுமையின் பிடியில் சிக்கியுள்ளனர்.

சோமாலியா, கென்யா மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் 20 இலட்சம் பேர் உள்ளனர். இதில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் சரியான ஊட்டச்சத்து இன்றி ஆபத்தான நிலையில் வாழ்கின்றன.

இந்த ஆபத்தில் இருந்து குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றுவதற்கு யுனிசெப் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்படி பல்வேறு முகாம்கள் மூலம் குழந்தைகளுக்கு தேவையான பால், குடிநீர், சுகாதாரம் போன்ற வசதிகளை வழங்கி உயிர்க்கொல்லி நோய்கள் பரவாமல் காப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

# பயணிகளை ஏற்றிய படகு கொங்கோவில் விபத்து




(கின்ஷசா)

கொங்கோ நாட்டில் பயணிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் நூறு பேர் வரை பலியானதாக அஞ்சப்படுகிறது. ஆபிரிக்கக் கண்டத்தின் மத்தியில் கொங்கோ நாடுள்ளது. இது அடர்ந்த புதர்கள் மற்றும் மிகப் பெரிய ஆறுகள் நிறைந்தது. எனவே, இங்குள்ள ஆறுகளில் பெருமளவில் படகுப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் ஈகுவேடர் மாகாணத்தில் உள்ள "யாபா ஆற்றில் படகு ஒன்று பயணிகளுடன் புறப்பட்டுச் சென்றது. அதில் சுமார் 220 பேர் பயணம் செய்தனர்.

செல்லும் வழியில் இந்த படகு மற்றொரு படகின் மீது பயங்கரமாக மோதியது. இதனால் 220 பேருடன் சென்ற படகு ஆற்றில் மூழ்கியது. தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் அங்கு விரைந்து வந்தனர். மீட்பு குழுவினரும் 105 பேரை மீட்டனர். சிலர் நீந்திக் கரை சேர்ந்தனர். அவர்கள் தவிர 100 பேரை காணவில்லை. எனவே, அவர்கள் அனைவரும் தண்ணீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இந்த விபத்து குறித்த விசாரணை நடத்தப்பட்டது. இதில், படகில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறு காரணமாக விபத்து ஏற்பட்டது தெரிய வந்துள்ளது.

# மெய்தான் பாருங்கோ!

## காலநிலையும்;கடவுளின் தீர்ப்பும்



இந்த வருடத்தில் மாசிப்பனி மூசிப் பெய்ய வேண்டிய மாதத்தில் பனி அவ்வளவாகப் பொழியவில்லை. அந்த மாசியும் பங்குனியும் போய் "வசந்தருது" என்று சொல்லப்படுகின்ற சித்திரை, வைகாசி மாத இளவேனிற் காலத்தில் பட்டமரம் மாதிரி நின்ற மரங்கள் யாவும் துளிர்த்து பூக்கள் பூத்து அழகு சொரிந்து கொண்டு நிற்கும்.

ஆனால், தற்பொழுது இந்த நிலை தலைகீழாக மாறி இடைக்கிடை குடைபிடிக்க வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்படுகின்றது. அந்தளவிற்கு மழையும், வெய்யிலும் மாறி மாறி ஒன்றுக்கொன்று மல்லுக்கட்டுவதாகவே தெரிகிறது.

வவுனியாவில் மழை பொழியும் அதேசமயத்தில் யாழ்ப்பாணத்தில் வெய்யில் கடுமையாக எறிக்கிறது. வெய்யில் வவுனியாவில் கடுமையாக எறிக்கும்போது மட்டக்களப்பு மறறும் மலை நாடுகளில் மழை பொழிகிறது. இதற்கு என்ன காரணம் என்று ஆன்மீக ரீதியாக ஒருவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. சிந்திக்க வெளிக்கிட்டிருந்தால் அநாவசியமான சீரழிவுகள் வந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

இப்பொழுது எல்லோருடைய வாயிலும் 'காலநிலை மாற்றம்' என்ற வார்த்தை வருகிறதேயொழிய, அந்தக் காலநிலை மாற்றத்துக்கான காரணத்தைத் தேடுவதாக இல்லை. அறிவு ரீதியாக, விஞ்ஞான ரீதியாகப் புத்திஜீவிகள் பல விளக்கங்களைச் சொல்கிறார்கள்; சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மனிதனானவன் தன் அறிவைக் கொண்டு குறிப்பிட்ட ஒரு எல்லையைத் தாண்ட முற்படும் பொழுதுதான், இயற்கையும் "என்னைவிட நீ மிஞ்சவோ?" என்று கேட்பது போல் சில சம்பவங்களை நடப்பித்துக் காட்டுகிறது.

வாழ்க்கையில் எல்லாவற்றையும் அறிந்துகொள்வதற்கு கல்வியறிவு முக்கியம்தான். தேடல் என்று சொல்லப்படுவது மிகவும் அவசியம்தான். ஆனர்ல் அதை அளவோடு வைத்துக் கொண்டு, காரியங்களை ஆற்றிக்கொள்ள வேண்டும். இன்றைய உலகத்தில் என்ன நடக்கின்றது? மனிதன், தான் கற்ற கல்வியறிவைக் கொண்டு கனரக ஆயுதங்கள் தொடக்கம் அணு குண்டு வரை வந்து அதற்கு அப்பாலும் போகலாமா? என ஆழ்ந்து யோசிக்கிறான். இப்படியாக ஆக்கத்திற்குப் பதிலாக அழிவுகளை உண்டுபண்ண வெளிக்கிடும் பொழுதுதான் இயற்கையும் பல அனர்த்தங்களைச் செய்ய வெளிக்கிடுகுது.

மனிதன் தெய்வத்துக்குப் பயந்து வாழ வேண்டுமென்பதற்காக ஒவ்வொரு மதங்களும் அறநெறிகளையும், ஆகம விதிகளையும் வகுத்து வைத்திருக்கின்றது. அந்த நெறிகளையும் விதிகளையும் மனிதன் விலக்கிக் கொண்டு வாழ வெளிக்கிடும் பொழுதுதான் பல விபரீதங்கள் ஏற்பட ஏதுவாகின்றது. பரிசுத்த வேதாகமத்தில் முதலாம் பகுதியான ஆதியாகமம் எனும் சுவிஷேசப் பகுதியில் நோவா என்பவருடைய காலத்தை நினைப்பவர்களுக்கு தற்பொழுது பூமியில் நடக்கும் காலநிலை மாற்றங்களைப் பற்றி புரிந்து கொள்ள முடியும்.

தெய்வபயம் அற்ற ஆட்கள் அநீதிகளை அளவுக்கு மீறிச் செய்ய வெளிக்கிடும் போதுதான் நியாயத் தீர்ப்பும் தோன்ற ஆரம்பிக்கின்றது. நியாயத் தீர்ப்பை அவரவர்க்கு நேரடியாகத் தோன்றிச் செய்வற்கு இன்றைய காலம் திருஞானசம்பந்தர் காலம் அல்லவே.

இதனால்தான் புவியில் அக்கிரமக் காரர்கள் அழிவதற்கும், கடவுளுக்குப் பயந்தவர்கள் இன்னும் திருந்தி நடப்பதற்கும், இயற்கை ஏதோ ஒரு வடிவில் சீற்றம் கொள்கிறது.

கிறிஸ்தவ சமயத்திலுள்ளவர்கள் அந்த நோவாவின் காலத்தைப் பரிசுத்த வேதாகமத்தின் ஊடாக நினைத்துப் பார்க்கிறார்கள். இதே போன்றுதான் ஒவ்வொரு மதமும் ஏதோ ஒரு வகையில், வடிவில் அக்கிரமக்காரர்களை எச்சரிக்கிறது. ஆனால் அவர்கள் திருந்துவதாகத் தெரியவில்லை.

உலகத்தில் ஏற்பட்ட கடந்தகால அழிவுகளான சுனாமி, நிஷாப் புயல் இந்தியா, இந்தோனிசிய, ஜப்பான் மற்றும் சுமாத்திரா தீவுகளில் நடைபெற்ற நில அதிர்வுகள் மற்றும் அமெரிக்காவிலுள்ள அமேசன் காடு நெருப்புப்பற்றி எரிந்தமை போன்ற சம்பவங்கள் எல்லாம் காலநிலை மாற்றத்துக்கான காரணம் என்று விஞ்ஞானம் கூறிக்கொண்டாலும், இது இறைவனின் நியாயத் தீர்ப்பாகவும் இருக்கக் கூடுமென ஆன்மீகம் எடுத்துரைக்கிறது. ஏனெனில் "கடவுளின் முன்னிலையில் மண்ணுலகு சீர்கெட்டிருந்தது, பூவுலகு வன்முறையால் நிறைந்திருந்தது" (ஆதியாகமம் 6:11) என்ற வேத வசனத்தின்படி உலகமும் இப்பொழுது அதேபோன்றுதான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மையாய்யுள்ளது.

-அனந்த சயனன், கைவேலி.

# தமிழ்க் கூட்டமைப்பு பேசவேண்டியது ஐ.ம.சு.மு உடன்தான் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் காட்டுவது அதையே!

கடுமையான இராணுவத் தடம் பதிந்துள்ள ஓரிடத்தில் அதுவும் ஆளும் அரச கூட்டணிக்கு எதிராக தமிழ் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ) வடபகுதியில் ஈட்டியுள்ள வெற்றி, எல்லாவற்றுக்கும் மேலாகத் தெரிவிக்கும் ஒரு கருத்து என்னவெனில்: இலங்கையில் போட்டி மிக்க பலகட்சி ஜனநாயகம் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதையே.

இலங்கைக்குள்ளிருக்கும் சகல சிந்தனைகளும் மற்றும் கொள்கைகளும் இலங்கையைப் பற்றிய அந்த அடிப்படை உண்மையையை முதல் நிலையாக நிச்சயம் அங்கீகரிக்க வேண்டும். இந்த நாட்டையும் தற்போதைய நிர்வாகத்தையும் விமரசனம் செய்பவர்களால் எங்களுக்கு அந்த அளவுக்கு எதையாவது பெற்றுத்தர முடியுமா? அவர்களைப்பற்றி நான் அறிந்தமட்டில் என்னால் எனது மூச்சையே பிடித்து வைத்திருக்க முடியாதளவுக்கு உணர்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துடன் இலங்கையில் ஜனநாயகம் மரித்துப்போய் விட்டது என எழுதிய எல்லோரும், நாஸி ஜேர்மனியின் கடமையாக்கப்பட்ட ஒரு மேற்கோள் கூட இல்லாமல் மகிந்த ராஜபக்ஷவைப் பற்றி ஒரு பந்தி கூட எழுத முடியாதவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுக்கூறத் தேவையில்லை. இவர்கள்

> **"சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் ஆகிய இருபகுதியினருமே தங்களைப்பற்றி மட்டுமே பெருமையடைவதுடன் நின்றுவிடக்கூடாது, ஒருவர் மற்றவரைப் பற்றியும் பெருமைப்பட வேண்டும். இந்தப் போரில் வெற்றி பெற்றதுக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நாங்கள் ஒருபோதும் இப்படியான ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கக் கூடாது அதை எண்ண வருத்தப்படுகிறேன்."**

எலலாருமே ரி.என்.ஏ வடக்கிலும் மற்றும் கிழக்கின் சில பகுதிகளிலும் சாதித்து உளளதைப் பார்த்து பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் ,அல்லது குறைந்தது தனிமையில் அவமானத்தால் கூனிக் குறுகி உட்கார்ந்து கொளளவேண்டும். ஆனால் திரும்பவும் இவர்களைப் பற்றி அறிந்து கொண்டவரை என்னால் எனது மூச்சையே பிடித்து வைத்திருக்க முடியாதளவுக்கு உணர்ச்சிப் பெருக்கு ஏற்படுகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த சக்தியாக வளர்ந்து வரும் துருக்கியில் அதன் மதச் சார்பின்மைக்காகவும் மற்றும் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கைக்காகவும் பெரிதும் போற்றப்படும் மிதவாத இஸ்லாமியக் கட்சி அந்நாட்டின் பிரிவினைவாத குர்தீஸ் இனத்தவர்களால் நீண்ட காலமாகவே பிரச்சினைகளை எதிர்கொண்டு வந்தது. இன்று துருக்கி மிகச் சிறந்த ஒரு நாடாகத் திகழ்கிறது. அதற்கான காரணம் அதன் பாராட்டத்தக்க தலைமைத்துவம் மட்டுமல்ல ஆனால் குர்தீஸ் இனத்தவருக்கும் முன்பைவிட சிறந்த இடம் கிடைத்துள்ளதும் ஒரு காரணம் ஆகும்.

குர்தீஸ்களுக்கு துருக்கி கூட்டாட்சியையோ அல்லது பிராந்திய சுயாட்சியையோ வழங்குவது கடினமாக உளளபோதும் உண்மையில் முன்பை விடச் சிறந்த இடம் என்பது எது? அது குர்தீஸ் மொழி வானொலிகள் மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் பலவற்றையும் கொண்டிருப்பதுடன், பாராளுமன்றத்தில் 30 இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களையும் மற்றும் குர்தீஸ் இனத்தவரகள் பெரும்பான்மையாக வாழுமிடங்களில் பல மாநகர முதல்வர்களையும் கொண்டிருக்கிறது.

இவைகளைத்தான் தமிழ் மக்களும் ரி.என்.ஏயும் இன்று கொண்டுள்ளனர். இதை ஏளனஞ் செய்யக்கூடாது. அல்லாமலும் திறந்துள்ள போருக்குப் பின்னான சாதனையாகக் கருதி, அதை மேலும் திறந்து வைக்க வேண்டும்.

2006 அல்லது 2007 தொடக்கத்தில் ஜனாதிபதி ராஜபக்ஷவும் உடனிருக் கையில் அர்ச் பிஷப் கன்ரர்பரி என்னிடம் வெறும் போர் என்ற ஒன்று வரையறுக்கப்பட்டால் அதன் விளைவு வெறும் முடிவாகத்தான் இருக்கும் என்று எப்படி என்னால் நிச்சயப்படுத்த முடியும் என்று கேட்டதற்கு அன்று நான் வழங்கிய பதிலைத்தான் இன்றைய தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளன. வடக்கும் கிழக்கும் புலிகளின் சர்வாதிகாரப்பிடியிலிருந்து இராணுவத்தினரால் விடுதலையாக்கப் படும்போது தேர்தல்



மற்றும் அரசியல் இடைவெளிகள் மீண்டும் திறக்கப்படும். மற்றும் தமிழ் மக்கள் மீண்டும் அடிமை நிலையிலின்றும் விடுதலை பெற்றவர்களாவார்கள், அவர்களுக்கு தங்கள் மனக்குறைகளையும் இலட்சியங்களையும் உள்ளடக்கிய தங்கள் அரசியல் செயற்பட்டியலை ஜனநாயக வழியில் மீண்டும் எழுதிக்கொள்ள முடியும். இருந்தாலும் அது ஐக்கியப்பட்ட இலங்கைக்குள்ளேதான் நடக்கும் என்றுதான் நான் அவருக்கு பதிலளித்திருந்தேன்.

இன்று இத்தீவின் உள்நாட்டு பூகோள அரசியல் நிலை வெகு தெளிவாக உள்ளது. நாட்டின் மூன்றிலிரண்டு பகுதியில் வசிக்கும் பெரும்பான்மையோரின் இடையே முந்தைய தனித்தன்மையான சக்தியாக விளங்குவது பொதுசன ஐக்கிய முன்னணியே. அதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் பேசும் மக்களின் முந்தைய தனித்தன்மையான அமைப்பாக மாறியுள்ளது. பொதுசன ஐக்கிய முன்னணி மத்தியில் முதன்மைக்கூறாய் உள்ளபோது வடக்கைச் சுற்றியுள்ள இடங்களில் ரி.என்.ஏ முன்னிலை வகிககிறது.

இந்த யதார்த்தம் மற்றொரு யதார்த்தத்தை நோக்கிச் செல்லுவதற்குரிய இடைக்கூடமாகிறது. ரி.என்.ஏ தனது பேரம்பேசலுக்கான பங்காளியாக பொதுசன ஐக்கிய முன்னணியைத் தவிர வேறொன்றினைப் பற்றிக் கனவு காணவும் முடியாது. ஐ.தே.கவுடன் ஒரு கூட்டணியை ஏற்படுத்துவது அர்த்தமற்ற ஒன்று. ஏனெனில் அந்தக் கட்சி இரண்டாம் பட்சமான ஒன்றாக வெகுதூரம் பின்னுக்குப் போய்விட்டது. எதிர்வரும் காலத்துக்காக அதனால் எதையும் வழங்க முடியாததுடன் மேலும் ரி.என்.ஏயுடன் அவர்கள் மேற்கொள்ளும் எந்தவிதமான கூட்டும் ஐ.தே.க. வின் தேர்தல் வெற்றிகளைப் பாதிக்குமே தவிர அவர்களை விரிவாக்காது, ஒரு வேட்பாளராக பொன்சேகா அதற்கான விலைணியக் கொடுத்துள்ளார் என்பதைக் காண்க்கூடியதாக உள்ளது. சிங்களவர் மத்தியில் இப்போது மதிப்புமிக்கதாக வலம் வருவது பொதுசன ஐக்கிய முன்னணி மட்டுமே.

அதேபோல தமிழர்களுடனான எந்தப் பேச்சுவார்த்தையும் ரி.என்.ஏ இல்லாமலோ அல்லது அதைத் தவிர்த்து விட்டோ நடத்துவது சாத்தியப்படாது. எதாவதொன்றின் விளைவாக நடத்தப்படும் அரசியல் பேச்சுவார்த்தைகளின் பிரதான அச்சாக இருக்க வேண்டியவை பொதுசன ஐக்கிய முன்னணியும் தமிழ் தேசியக் கூட்டமைப்புமே. இது மூன்றாவது அல்லது அடித்தட்டு யதார்த்தத்திலிருந்து கிடைக்கும் இரண்டாவது யதார்த்த முடிவாகும். ஒன்றில் சிங்களவரோ அல்லது தமிழரோ ஒருவர் மற்றொருவர் மேலாக ஆதிக்கம் செலுத்த முடியாது. சிங்களவரை எந்த ஒரு எல்லைக்கு மேலும் பின் தள்ளிவிட முடியாது என்பதை போரில் ஈட்டிய வெற்றிமூலமாக அவர்கள் நிரூபித்துள்ளார்கள்.

எவ்வளவு காலமானாலும் எந்த முரண் பாடுகள் ஏற்பட்டாலும் உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ அல்லது அதன் கூட்டாகச் சேர்ந்து யார் எதிரியாக வந்தாலும், சிங்களவர்கள் இந்த நாட்டை என்றும் ஐக்கியப்பட்ட பிராந்தியமாகவும், ஒற்றை ஆட்சியின் கீழுமே வைத்திருப்பார்கள். வெளிநாடுகளில் வசிப்பவர்களோ அல்லது மீள்குழுக்களாக ஒன்றிணைந்துள்ளவர்களோ தமிழ் ஈழத்துக்கான போரில் தோல்வியடைந்த பின்னர், முன்னாள் காலனித்துவ புரவலர்களின் ஆதரவுகளைத் திரட்டிக கொண்டு தாங்கள் இழந்ததை மீண்டும் அடைவதற்கு முயற்சிப்பவர்கள் தக்க பாடத்தைப் படிப்பார்கள்.

இலங்கை நாடானது விடுவிக்கப் பட்டதும் மீள ஒருங்கிணைக்கப்பட்டது மாகும். எத்தகைய தலைவர், கொடி, அல்லது தலைமுறைகளின் கீழும் மற்றும் 'எந்த முடிவு அவசியமாகிறதோ' அதை மேற்கொண்டு அதன்கீழ் தன்னை வைத்திருக்கும்.

தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் பகுதியாக அவர்களின் கூட்டு அடையாளத்தையோ மற்றும் கண்ணியம் தேடுவதையோ ஒருபோதும் கைவிடமாட்டார்கள்.

இரண்டில் ஒன்றின் அல்லது மற்ற சமூகத்தின் தனித்தன்மையான விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாமல் நீடித்து நிற்கும் சமாதானம் சாத்தியப்படாது. ஒன்றில் ஒரு தமிழ் மாநிலம் (தனியானது அல்லது கூட்டாட்சி) அல்லது தமிழர்கள் மீதான சிங்கள அமைதிதான் அங்கு இருக்க முடியும். இதற்கு தீர்வுகாண வாழ்க்கையை வாழ்வதற்கு ஏற்றவிதமாக ஒரு வழியை ஏற்படுத்த வேண்டும். இந்த வாழும் வழியினை புத்த பகவானின் மத்திய பாதை அல்லது அரிஸ்டோட்டலின் தங்கக் கருத்து எனப்படும் - தோற்றம் இயல்பு மற்றும் நல்லொழுக்கங்களின் வளர்ச்சி என்பனவே இறுதி இலக்கை அடைவதற்கு அத்தியாவசியமானவை - தத்துவங்களின் மூலமாக மட்டும்தான் சிங்கள மற்றும் தமிழ் இடையேயான தேசியத்தின் விருப்பங்களை காணமுடியும்.

இந்தத் தேர்தல் முடிவுகளின்படி எங்களுக்கு கிடைத்திருப்பது, புதிய சமநிலையான சக்திகள், புதிய சம்பவங்களின் கூட்டு என்பன. இது மக்கள் தொகையின் யதார்த்தங்களுக்கும் மற்றும் முப்பது வருட தீர்க்கமான போரின் விளைவுகளுக்கும் ஏற்றதான ஒரு சம அம்சத்தையோ அல்லது சரியான சமநிலையையோ தரவில்லை, தரமுடியாது. எனினும் அது புதியதொரு பார்வைக்கு மற்றும் புதியதொரு யதார்த்தத்துக்கான வாய்பபை வழங்கியுள்ளது. நாம் முன்பு இங்கே இருந்திருக்கி றோமா? 1977 இல் நடந்த தேர்தல் வரைபடம் கிட்டத்தட்ட இதற்குச் சமமானதாகவே இருந்தது. ஐ.தே.க மூன்றிலிரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மையை அனுபவித்தபோது தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கிலும் கிழக்கின் சில பகுதிகளிலும் ஆதிக்கம் செலுத்தியிருந்தது. வித்தியாசம் என்னவென்றால் பிரிவினைவாத யுத்தம் ஒரு நீண்ட காலத்துக்கு மேலாகப் போராடும்படியான நிலையிலிருந்ததுடன் மற்றும் தோல்வியடையவும் வேண்டியிருந்தது. மேலும் ஒருபக்கத்தினரின் தாமதங்களினாலும் மறுபக்கத்தினரின் மாறுபட்ட உணர்ச்சிகளினாலும் எற்பட்ட விளைவுகளினால் உருவான தவிர்த்திருக்கப் படக்கூடிய சோகத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் இன்னும் உள்ளன. நாம் மீண்டும் இந்தத் தவறை செய்யாதிருப்போமாக.

உண்மையில் நாம் இன்று வேறொரு இடத்தில் இருக்கிறோம். வட்டுக்கோட்டைத தீர்மானம் மூலமாக உத்வேகத்தை ஏற் படுத்திய தனி நாட்டு மாயை நந்திக் கடலில் எரிக்கப்பட்டு அல்லது புதைக்கப்பட்டு விட்டது. தமிழர்களை மௌனமாக்க முயற்சிப்பது மற்றும் அவர்களது கலாசார மற்றும் அரசியல் தீர்வுகளை அகற்ற நினைப்பது போன்ற பிரமைகளும் நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சி தேர்தல் வரைபடம் தெளிவுபடுத்தியிருப்பதன்படி தவறாகிப் போய் விட்டன. இரண்டு சமூகங்களுமே ஒருவர் மீது ஒருவர் தங்களின் அதிசிறந்த அல்லது மிக மோசமான தெரிவுகளை விட்டெறிந்த படி இன்னும் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

என்னதான் தீர்வு மற்றும் பின்னடைவு! சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் ஆகிய இருபகுதியினருமே தங்களைப்பற்றி மட்டுமே பெருமையடைவதுடன் நின்றுவிடக்கூடாது, ஒருவர் மற்றவரைப் பற்றியும் பெருமைப்பட வேண்டும். ஏனெனில் நாங்கள் இந்தத் தீவில் வசிப்பவர்கள் மற்றும் ஒரே மரபணுக்களை பங்கிட்டுக் கொள்பவர்கள். நாங்கள் சகோதர சகோதரிகள். நாங்கள் ஒன்றுபடுவதன் மூலமாக சாதிக்கக்கூடியது என்ன! இந்தப் போரில் வெற்றி பெற்றதுக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நாங்கள் ஒருபோதும் இப்படியான ஒரு போராட்டத்தில் ஈடுபட்டிருக்கக் கூடாது அதை எண்ணி வருத்தப்படுகிறேன். இப்போது நாங்கள் சில வகையான சமநிலைகளை அடைந்திருக்கிறோம். ரி.என்.ஏ குறித்த இலக்கைப் பலமாகத் தள்ளுகிறது அல்லது மேலாகப் பாய்கிறது என்றால் தீவின் மொத்தப்பகுதியினரது கருத்தும் இறுக்கமானதாக இருக்கும் மற்றும் இதற்கு எதிர்மாறான நிலையும் தோன்றும்.

தமிழர்களின் மனக்குறைகளை பெரும்பான்மையான சிங்களவர்கள் அங்கீகரிக்காவிட்டால் அதற்குத் தீர்வே கிடைக்காது. சாதரணமாக தமிழர்களின் சம்மதமின்றி ஆழமாக வேரூன்றிய சமாதானம் அங்கு இருக்கவும் முடியாது. ஒருவருக்கொருவர் பரஸ்பர மரியாதை மற்றும் யதார்த்தங்களை கொடுத்து வாங்குவதற்கும் அத்தோடு நிலையான சமாதானத்தை உருவாக்குவதற்கும் ஏற்ற நல்ல தருணம் இதுதான்.

தயான் ஜயதிலக

# எம்.பி.கள் தொகை குறைப்பு நடவடிக்கையை இடைநிறுத்துங்கள்

## மனோகணேசன் கோரிக்கை



(கொழும்பு)

யாழ். மாவட்டத்தின் எம்பிக்கள் தொகை ஒன்பதிலிருந்து 5 ஆகக் குறைக்கப்படவிருப்பதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார். இதற்கான அதிகாரம் தேரதல் ஆணையாளருக்கு இருந்தாலும்கூட, இதன் பின்னணி அரசியல் அடிப்படை கொண்டதாகும்.

எனவே அரசியல் ரீதியான தீர்வு காணப்படும் வரை இந்நடவடிக்கை இடை நிறுத்தப்பட வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மனோகணேசன் மேலும தெரிவித்துள்ளதாவது,

யாழ். மாவட்டத்தில் 2009 வரை 816,005 வாக்காளர்கள் பதிவாகி இருந்தனர். இதில் 331,214 பெயர்கள் அகற்றப்பட்டு, தற்போதைய 2010 ஆம் வருட பதிவில் 484,791 எஞ்சியுள்ளனர். இந்த அடிப படையிலேயே எம்பி.களின் தொகையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேவேளையில் யாழ் மாவட்ட பதிவிலிருந்து குறைக்கப்பட்ட சுமார் 330,000 பேரில் ஒரு தொகையினர் வெளிநாடு சென்றுவிட்டதாகவும், பிறிதொரு தொகையினர் மேல்மாகாணத்திற்கு குடிபெயர்ந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. நாட்டைவிட்டு தமிழர்கள் வெளியேறி உள்ளமைக்கு போரும், தேசிய இனப்பிரச்சினையும் பாரிய காரணங்களாக அமைந்திருக்கின்றன.

இன்று வெளிநாடுகளில் குடியேறியுள்ள அனைவருமே அந்வந்த நாடுகளின் குடியுரிமை பெற்றுவிட்டார்கள் என்று கூறமுடியாது. அத்துடன் சுமார் 1 இலட்சம் இலங்கையர் தமிழ் நாட்டிலே அகதிகளாக இருக்கின்றார்கள். அத்துடன் வழமையிலிருந்த இரட்டை குடியுரிமை முறைமையையும் தற்சமயம் அரசியல் நோககத்துடன் கடுமையாக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்தும் தேசிய இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டவையாகும். எனவே தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படும் வரை இந்நடவடிக்கை ஒத்திவைக்கப்படவேண்டும். இவ்விவகாரம் அரசிற்கும், கூட்டமைப்பிற்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையில் விவாதிக்கப்பட வேண்டும்.

## உல்லாச விடுதிகள் கிழக்கில் நிர்மாணம்

கிழக்கு மாகாணத்தில் இரண்டு பிரமாண்டமான உல்லாசவிடுதிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு சுமார் 16 மில்லியன் டொலர் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு நிறுவனம் ஒன்று தயார்ராக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. திருகோணமலை குச்சவெளியில் 850 மில்லியன் 'ரூபா முதலீட்டில், 50 அறைகளைக் கொண்ட உல்லாச விடுதியை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பணிகள் 2012ம் ஆண்டு ஜூன் மாதமளவில் நிறைவடையும் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் இதேபோன்ற மற்றுமொரு உல்லாச விடுதி, மட்டக்களப்பு பாசிக்குடாவில் நிர்மாணிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 900 மில்லியன் ரூபா பெறுமதியில் இந்த உல்லாச விடுதி நிர்மாணிக்கப்படவுள்ளது. 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதமளவில் இந்தப் பணிகள் நிறைவடையும் என்று தெரிவிககப்படுகிறது.

# அமெரிக்க உதவிகள் இரத்து; இதுவரை தீர்மானம் இல்லை

உதவிகளை ரத்து செய்யும் தீர்மானம் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என இலங்கைக்கான அமெரிக்காவின் முன்னாள் தூதுவர் ரொபர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான உதவிகளை இரத்து செய்யும் யோசனைத் திட்டம் தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

புலி ஆதரவு அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் ஒருவரினால் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும், புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்படும் வரையில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்பட மாட்டாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## வீடமைப்புக்கு குவைத் நிதியுதவி

(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியால் குவைத் நிதி உதவி மூலம் இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு 2000 வீடுகள் அமைக்கப்பட உள்ளன.

இது தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. அமைச்சர் ரிஷார்ட் பதியுதீன் மற்றும் குவைத் ஒருங்கிணைப்பு நிவாரண சேவைகள் அமைப்பின் தலைவர் பதர் ரூக் இருவரும் இதில் கைச்சாத்திட்டனர்.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக மன்னார் நொச்சிகுளம் பகுதியில் 2 இலட்சத்து 31 ஆயிரம் டொலர் செலவில் 42 வீடுகள் அமைக்கப்பட உள்ளன.

## கடத்தப்பட்ட கப்பல் விடுவிப்பு



(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கையர் ஒருவர் உள்ளடங்கிய கப்பல் மற்றும் அதன் பணியாளர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையர் அடங்கிய குறித்த கப்பல் கடந்த வாரம் சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருந்தது.

கடத்தப்பட்ட கப்பலையும் அதிலிருந்த பணியாளர்களையும் விடுவிக்கவென கப்பல் நிறுவனமானது கடற்கொள்ளையர்கள் கோரியிருந்த 2 இலட்சம் அமெரிக்க டொலர் கப்பத்தை செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய மற்றும் கல்ப் கடல் வலயத்தை அண்மித்து சேவையில் ஈடுபடும் பல கப்பல்கள் சோம்ாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியப் பிரதமருடன் பேச்சு; உலக தமிழ் அமைப்புக்கள் மனு

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை உலகத் தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பின் தலைவர் சேதுராமன் உட்பட முக்கிய தமிழ ஆர்வலர்கள் கடந்த புதன்கிழமை (27 ஆம் திகதி) சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாகப் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

மன்மோகன் சிங்கின் இல்லத்தில் இந்தச் சந்திப்பு சுமார் 15 நிமிடங்கள் இடம் பெற்றதோடு தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் தங்கபாலுவும் உடனிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பிரச்சினை, ஐக்கிய நாடுகள் சபையில் வாக்கெடுப்புக்கு வரும்போது, தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியா நிற்கவேண்டும், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து செய்ய வேண்டும். 13 ஆவது சட்டத்திருத்தம் அளிக்கும் அனைத்து உரிமைகளையும் இலங்கைத் தமிழர்களுக்கு பெற்றுத்தர இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்திய பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

13 ஆவது சட்டதிருத்தத்தில், தமிழர்களுக்கு என்னென்ன உரிமைகள் உள்ளனவோ அவற்றையெல்லாம் தரவேண்டும் என இலங்கை அரசிடம் சந்தர்ப்பம் வாய்க்கும் போதெல்லாம் இந்தியா எடுத்துக் கூறிவருவதாக மனுவை ஏற்றுக் கொண்ட மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

## உடன் தொடர்பு கொள்ளவும்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கான தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் நேரடியாக பரீட்சைத் திணைகளத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக்கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க கோரியுள்ளார்.

எதிர்வரும் 8 ஆம் திகதி முதல செப்டம்பர் 3 ஆம் திகதி வரை க.பொ.த. உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளும், நேர அட்டவணைகளும் அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## நோயாளர் விடுதி விரைவில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் விடுதிகளில் நோயாளர் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான நடவடிக்கைகள துரிதப்படுத்தப்பட்டிருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவு என்பன தற்சமயம் அதன் பழைய இடத்தில் இயங்கிவருவதாகவும், விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கான விடுதிகள் புனரமைக்கப்படும் பணிகள் பூர்த்தியடையாமல் இருப்பதன் காரணமாகவே உடனடியாக விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு நோயாளர்களை அனுமதிக்க முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இப புனரமைப்புப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியளவில் இப்பிரிவு இயல்பாக ஆரம்பிக்கும் எனவும் தெரிவித்தார்.

பல ஆண்டுகளின் பின்னர் வலிகாமம் வடக்குப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டிருக்கும் நிலையில் அவரகளது வைத்திய சேவையை மேம்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

(பா)

## அதிசயிக்கத்தக்க...


ஆரம்பமாகிய இந்நிகழ்வில் சிங்கப்பூர் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ் இஜோ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர ஆணையாளர் சரவணபவ, யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, பிரதம நூலகர் தனபாலசிங்கம், சிங்கப்பூர் ஆளுநர் வினோத் குமாரசுவாமி, சிங்கப்பூர் உயர்ஸ்தானிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த வைபவத்தில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, யாழ் ம்ாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் சிங்கப்பூர் ஆளுநர் வினோத குமாரசுவாமி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

## செய்திப்பூணம்

**சிற்பிசிவப் பிரகாசம் செய்தசிலை சங்கிலிக்கு
அற்புதமாய் சகலதாலும் அமைந்ததாம் - கற்குவியல்
ஆக்கித்தொண் ணூற்றைந்து இடம்பெயர் நிகழ்வாலே
போக்கிட மான சிலை புதிது!**



# யாழில் மீன்பிடித் துறைமுகங்கள் துரித கதியில் ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் மற்றும் பருத்தித்துறை இன்பசிட்டிப் பகுதிகளில் நவீன வசதிகளுடன் கூடிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படுவதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் இம்மீன்பிடித் துறைமுகங்களை நவீனமாக புனரமைப்பதற்கான மதிப்பீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை இன்பசிட்டிப் பகுதியில் அமையவுள்ள நவீன வசதிகளைக் கொண்ட இம் மீன்பிடித்துறை முகத்திற்கு சுமார் 1000 மில்லியன் ரூபா தேவையென மதிப்பீடு செய்துள்ளதாகவும், அதேபோன்று குருநகர்ப் பகுயிலும் அமையவுள்ள மீன்பிடித் துறைமுகத்திற்கான மதிப்பீட்டுப் பணிகளும் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்திருந்த பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ யாழ். குடாநாட்டில் மேற்குறித்த பகுதிகளில் இரண்டு மீன்பிடித் துறைமுகங்கள் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# வடமராட்சி கிழக்கில் விரைவில் மத்திய மருந்தகம்

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, கேவில் ஆகிய பகுதிகளில் அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட மக்களின் வைத்திய சேவையை மேம்படுத்த கட்டைக்காட்டுப் பகுதியில் 5 மில்லியன் ரூபா செலவில் மத்திய மருந்தகம் ஒன்று நிர்மாணிக்கப் படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

என்றிப் திட்டத்தின் கீழாகவே இம் மத்திய மருந்தகம் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே குறித்த பகுதியில் மத்திய மருந்தகமொன்று இயங்கி வந்த தாகவும் 1990 ஆம் ஆண்டு யுத்த சூழ்நிலைகளின் போது அது முழுமையாக அழிவடைந்திருந்தாகவும் அந்தப் பகுதியிலேயே குறித்த மத்திய மருந்தகம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், குறித்த பகுதியில் குடிநீர்க் கிணறுகளைச் சுத்தம் செய்யவும் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம செய்யவும் யுனிசெவ் நிறுவனத்தினால் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், இப்பகுதிகளுக்கு தற்சமயம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினதும் மலேசிய நிறுவனத்தினரதும் நடமாடும் மருத்துவ சேவையொன்றும் கிழமையில் மூன்று நாட்கள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்ததுடன், மருதங்கேணி வைத்திய சாலையில் குறித்த பகுதி மக்களின் தேவை கருதி நிரந்தரமாக நோயாளர் காவு வண்டியொன்றும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (பா)

# காலநிலை சீர்கேடு நீர் மின்னில் நம்பிக்கையில்லை



காலநிலை சீர்கேடு காரணமாக நீர்மின் விநியோகத்தில் பாரிய நம்பிக்கை வைத்திருக்க முடியாது என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மஹவ்வ - தலதாவ மின் பொறியியல் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் கூறினார்.

மேலும் எரிபொருள் விலை அதிகரித்துள்ளதால் மின் உற்பத்தியில் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இதனால் எதிர்காலத்தில் நிவாரண விலைக்கு மின் சாரத்தைக் கொடுக்க முடியாது என சுட்டிக்காட்டினார்.

# யாழ். டிப்போவிற்கு 40 புதிய பஸ்கள்

இலங்கை போக்குவரத்து சபைக்கு மேலும் 1000 பஸ்களை கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு பஸ் டிப்போவிற்கு 40 பஸ்கள் வீதம் வழங்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தனியார் மற்றும் அரச போக்குவரத்து சபை பஸ்களுக்கான சரியான நேரம் கணிக்கப்பட்டால் பஸ்களின் எண்ணிக்கை குறித்து தீர்மானிக்கப் படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மிகவிரைவில் அதிவேக ரயில்கள் பலவும் கொள்வனவு செய்யப்படவிருப்பதாக குமார வெல்கம கூறினார்.

# கரு ஜெயசூரிய இந்தியாவுக்கு

(கொழும்பு)




ஐ.தே.க. மறுசீரமைப்புக் குழுவின் கட்சித் தலைமைத்துவம் தொடர்பாக கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ள பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, நேற்றுக் காலை இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றதாக தகவலறிந்த கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

கரு ஜயசூரிய, தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் நான்கு நாட்கள் அவர் வெளிநாட்டில் இருப்பார் எனவும் அவரின் அலுவலகம் தெரிவித்தது.

# காணாமல் போன படை அதிகாரி சடலமாக மீட்பு

(கொழும்பு)



கடந்த ஏழு வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்ததாகக் கூறப்படும் இராணுவத்தின் லெப்டினன் பதவிநிலை வகித்த அதிகாரி ஒருவரின் சடலம், இரகசிய பொலிஸாரால் கல்கமுவ பிரதேசத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

நிலந்த அல்விஸ் என்ற இராணுவ அதிகாரியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் சடலத்துக்குரிய நபரை உறுதி செய்வதற்காக அவரது நெருங்கிய உறவினரது இரத்தம் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2004ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி அஹங்கம பிரதேசத்திலிருந்து சைக்கிளொன்றை கொள்வனவு செய்வதற்காக குருநாகல் பிரதேசத்துக்கு சென்ற இவர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரகசிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கலை நிலா அரங்கு

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்ற 'கலை நிலா அரங்கு' இன்று மாலை 5.00 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரான்ஸ் திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் டேமியன் சூரி கலந்து சிறப்பிப்பார்.

இந்நிகழ்வில் கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவர்களின் நடனம், பாட்டு, ஓர்கன் இசை போன்ற பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (52)

# புலிகளின் போர்க்குற்றங்கள் தயாராகிறது திரைப்படம்




ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர சிவில் பாதுகாப்புப் படைப் பிரிவின் எழுச்சி, புலிகள் இயக்கத்தின் போர்க் குற்றங்கள், ஆகியவற்றை வெளிப்படுத்துகின்ற வகையில் முழு நீள திரைப்படம் ஒன்றை இயக்கி வருகின்றார். இத்திரைப்படத்தின் பெயர் காமினி.

இதுவே அட்மிரல் வீரசேகர இயக்குகின்ற முதலாவது படம். எதிர்வரும் 19 ஆம் திகதி திரையிடப்பட உள்ளது. அட்மிரல் வீரசேகர அரசபடையில் உயர் பதவிகள் வகித்தவர்.

சிங்கள திரை உலகின் முன்னணிப் பிரமுகர்கள் மற்றும் கலைஞர்கள் பலரும் இத்திரைப்படத்தில் பங்கேற்கின்றார்கள்.

# கே.பி. விடயத்தில் சர்வதேச நடைமுறைகள்

(கொழும்பு)

குமரன் பத்மநாதன் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளே பின்பற்றப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குமரன் பத்மநாதன் தொடர்பில் இணையத் தளங்களிலும் ஏனைய தரப்பினராலும் பல்வேறு தகவல்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

எனினும், சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறைகளுக்கு அமைவாகவே குமரன் பத்மநாதன் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வியன்னா, ரோம் போன்ற சர்வதேச பிரகடனங்கள் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும், இவற்றில் இலங்கை கைச்சாத்திட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே, இந்த பிரகடனங்களுக்கு புறம்பான வகையில் செயற்பட முடியாது என்றார் கெஹலிய.

# உள்ளூராட்சி சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு கிடைக்கும்



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றுள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் தேவையான நிதி உட்பட சகல வசதி வாய்ப்புக்களையும் அரசாங்கம் பெற்றுக்கொடுக்கும் என அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

முன்னெடுக்கப் படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகளை இனி அவர்களே முன்னெடுக்க முடியும். எனினும் தேவையான நிதியையும் வசதிகளையும் அரசு செய்து கொடுக்கும். இது அரசின் கடமையுமாகும் என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

வடக்கிலும் கிழக்கிலும் அழிவுற்றதற்கு பிரபாகரன் உட்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே பொறுப்பாளிகள். எனவே எம்மிடம் கேட்பதைவிட அவர்களே வடக்கு கிழக்கின் அபிவிருத்திகளை முன்னெடுக்க வேண்டும் என அரச தரப்பு எம்.பி. ஒருவர் கூறியிருக்கிறாரே என செய்தியாளர் கேள்வி எழுப்பினார்.

மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தெரிவு செய்து இன்று அவர்கள் உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியுள்ளனர். இனி அவர்கள் அபிவிருத்திப் பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். இதனைத்தான் அவர் குறிப்பிட்டிருக்கிறார். எனினும் தேவையான நிதியையும் வசதிகளையும் வாய்ப்புகளையும் அரசு வழங்கும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பதிலளித்தார்.

# வீடுகள் கையளிப்பு

மட்டக்களப்பு ஆரையம்பதி காங்கேயனோடை கிராமத்தில் ஈரான் இஸ்லாமிய குடியரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டம் பிரதமர் டி.எம். ஜயரட்னவினால் இன்று பயனாளிகளுக்கு கையளிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கு 170 மில்லியன் ரூபாவை ஈரான் இஸ்லாமிய குடியரசு வழங்கியுள்ளது. இக்கிராமத்தில் மொத்தமாக 70 வீடுகளும், பள்ளிவாசல், சுகாதார நிலையம், விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா போன்றவைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு வீதிகளை அமைப்பதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 230 லட்சம் ரூபாவும், உள்ளக வீதிகளை அமைப்பதற்கு சுமார் 200 லட்சம் ரூபாவும், மின் விநியோகத்திற்கு சுமார் 65 லட்சம் ரூபாவும் வழங்கியுள்ளது.

# கடற்படையினர் தயாரித்த மருந்து ஏற்றும் இயந்திரம்

இலங்கை கடற்படையினரால் தயாரிக்கப்பட்டுள்ள தெலிசீமியா நோய்க்கு தடுப்பு மருந்து ஏற்றும் 150 இயந்திரங்கள் வைத்தியசாலை களுக்கு நேற்றுமுன்தினம் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.

தெலிசீமியா நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாளொன்றுக்கு சுமார் 10 தொடக்கம் 12 மணித்தியாலங்கள் வரை தடுப்பு ஊசி ஏற்றுவதற்காக இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த இயந்திரம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டுமாயின் இயந்திரமொன்றுக்கு 75 000 ரூபா செல்விட வேண்டும். இந்நிலையில் அதே இயந்திரத்தை சர்வதேச தரத்தில் இலங்கையில் தயாரித்துள்ள கடற்படையின் ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவு சுமார் 4,500 ரூபாவுக்கு பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை செய்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.